Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, SEPTEMBER 12, 2021

திங்கட்கிழமை 12, செப்டெம்பர் 2022 | ஒளி: 08 கதிர் 097 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## கடலில் பயணித்த 84 பேர் சிக்கினர்



■ கனகராசா சரவணன், எம்.எஸ்.எம் நூர்தீன்

மட்டக்களப்பு, செங்கலடியில் கடற்பரப்பில் இருந்து அவுஸ்ரேலியாவுக்கு சட்டவிரோதமாக இயந்திரப் படகில் பயணிக்க முயன்ற 84 பேரை கடலில் வைத்தும் இவர்களை கடற்கரையில் இருந்து இயந்திரப் படகுக்கு கொண்டு சென்று விடும் நடவடிக்கையில் ஈடுபட்ட 5 பேர் உட்பட 89 பேரை, கடற்படையினரும் விசேட அதிரடிப்படையினரும் இணைந்து, நேற்று (11) அதிகாலை கைது செய்தனர்.

தொடர்ச்சி P2

# ‘சிங்கள–பௌத்த நாடு’ நிலை மாறும்வரை நிலைமாற்றம் நிகழாது

### சமந்தா பவரிடம் மனோ கணேசன் எடுத்துரைப்பு



“இன்று இந்நாட்டில் ஏற்பட்டிருப்பது பொருளாதார பிரச்சினை மட்டுமல்ல. அதையும் மீறிய அரசியல், சமூக, பொருளாதார நெருக்கடி ஆகும். இதற்கு மூல காரணம், இந்நாட்டில், இன்னமும் தீராமல் இருக்கும், தேசிய இனப்பிரச்சினை ஆகும். இதற்கு பிரதான காரணம், இந்த நாடு சிங்கள பௌத்த நாடு என்ற நிலைப்பாடு மாறாமல் இருப்பதே ஆகும் என்று தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க யூஎஸ்எய்ட் நிர்வாகி சமந்தா பவருக்கும், இலங்கையின் ஏழு எதிர்க்கட்சி தலைவர்களுக்கும் இடையில் கொழும்பு வோட்டர்ஸ் எட்ஜ் விடுதியில் நேற்று (11) இடம்பெற்ற சந்திப்பிலேயே ம னோ கணேசன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பல மொழி, பல இனம், பல கலாசாரம் என்ற கொள்கை முற்று முழுதாக ஏற்கப்படும்வரை உள்நாட்டில் நிலைமாற்றம் ஏற்படாமல் தொடர்கிறது. அதேபோல் வெளிநாட்டு மட்டத்தில், இலங்கை கடலில் இந்திய-சீன முரண்பாடு தீவிரமடைகிறது.” என சமந்தா பவரிடம் எடுத்து கூறியுள்ளார்.

தொடர்ச்சி P2



# 6 மாத கால அவகாசம்

### சமந்தா பவருடனான சந்திப்பில் ஜனாதிபதி

### வாக்கெடுப்புக்கு செல்லவுள்ளதாக தெரிவித்துள்ளார்

தேவையான தேர்தல் சீர்திருத்தங்கள் குறித்து தீர்மானம் எடுப்பதற்கு பாராளுமன்றத்துக்கு 6 மாத கால அவகாசம் வழங்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இல்லையெனின், சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி எத்தகைய முறைமை வேண்டும் என்பதை பொது மக்களிடம் கேட்கவுள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இதை அரசியல் கட்சிகள் என்றைக்கும் தள்ளிப் போட முடியாது என்றும் அவர்கள் விரும்பவில்லை என்றால், முக்கிய சீர்திருத்தங்கள் குறித்து வாக்கெடுப்புக்கு செல்லவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

### மனிதாபிமான உதவியாக

# 20 மில்லியன் டொலர் உதவி



■ மஹேஸ்வரி விஜயனந்தன்

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்கான மனிதாபிமான உதவியாக இலங்கைக்கு அமெரிக்கா மேலும் 20 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கவுள்ளதாக அமெரிக்க உதவி திட்டத்தின் தலைமை அதிகாரி சமந்தா பவர் தெரிவித்தார்.

இலங்கையின் இன்றைய பொருளாதார நெருக்கடி தொடர்பில் கவலையடைவதாகவும் அதற்காக இலங்கை மக்களிடம் தனது மன வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டார்.

இலங்கைக்கு 2 நாள் உத்தியோகப்பூர்வ விஜயமொன்றை மேற்கொண்ட வருகைத் தந்த அவர், கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்தில் நேற்று (11) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், விவசாய நடவடிக்கைகளுக்கு 40 மில்லியன் டொலர் நிதியுதவி வழங்குவதைப் உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்களுக்கான மனிதாபிமான உதவியாக மேலும் 20 மில்லியன் டொலர்களை வழங்கவுள்ளதாக தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### அரசுக்கு சொந்தமான நிறுவனங்களால்

# ஒரு இலட்சம் கோடி ரூபாய் நட்டம்



அரசுக்கு சொந்தமான நிறுவனங்களால் சுமார் ஒரு இலட்சம் கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

### யாழில். போதைபொருள் பாவித்த

# சகோதரனால் வன்புணர்வு;

### சகோதரி உயிர் மாய்ப்பு

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்தில் போதைக்கு அடிமையான இளைஞன் ஒருவன், போதைப்பொருளை பாவித்த பின்னர் தனது சகோதரியை வன்புணர்வுக்கு உள்படுத்தியதனால், சகோதரி மனவிரக்திக்கு உள்ளாகி தனது உயிரை மாய்த்து கொண்டுள்ளார்.

தொடர்ச்சி P2

### தேர்தலை ஒத்திவைக்க தயாராகிறது அரசாங்கம்

# சட்ட நடவடிக்கை எடுக்க ப:ப்ரல் தீர்மானம்




பல்வேறு விடயங்களை முன்வைத்து உள்ளூராட்சி மன்றத் தேர்தலை மீண்டும் ஒருமுறை ஒத்திவைக்க அரசாங்கம் தயாராகி வருவதாக சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு (பஃப்ரல்) குற்றஞ்சுமத்தியுள்ளது.

தொடர்ச்சி P2

# தமிழர்கள் நால்வர் ஜெனீவா விரைந்தனர்

■ வி.ரி. சகாதேவராஜா

ஐக்கிய நாடுகள் சபையின் 51ஆவது மனித உரிமைகள் கூட்டத் தொடரில் கலந்துகொள்வதற்காக இலங்கையில் இருந்து தமிழர்கள் நால்வர் ஜெனீவாவை நேற்று (11) சென்றடைந்தனர்.

தொடர்ச்சி P2



### ஈஸ்டர் தாக்குதலை

# கூலிப்படையினர் மேற்கொண்டனரா?

### ஹக்கீம் சந்தேகம்

■ எம்.றொசாந்த்

ஈஸ்டர் தாக்குதல் மூலம் இஸ்லாமிய தீவிரவாதம் நாட்டுக்குள் ஊடுருவி விட்டதான மாயையைக் காட்டுவதற்காக கூலிக்கு அமர்த்தப்பட்ட படையினரை இந்த நாட்டின் உளவுத்துறையே பயன்படுத்தியதா என்கிற பாரிய சந்தேகம் தற்போது எழுந்துள்ளதாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



### மின் கட்டணத்தை

# கட்டத் தவறினால் துண்டிக்கப்படும்

### சோபித தேரருக்கு அமைச்சர் காஞ்சன அறிவிப்பு

மின் கட்டணத்தை செலுத்தத் தவறினால் மின் இணைப்பு துண்டிக்கப்படும் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஜாதிக ஹெல உறுமயவின் முன்னாள் தலைவருமான ஓமல்பே சோபித தேரருக்கு மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, நேற்று (11) பதிலளித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# ஜெனீவா பறந்தனர் எதிர்க்கட்சி எம்.பிகள்



ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது அமர்வில் கலந்துகொள்வதற்காக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், சுவிட்ஸர்லாந்தின் ஜெனீவா நகருக்கு விஜயம் செய்துள்ளனர்.

தொடர்ச்சி P2



# மகாராணியின் இறுதிச் சடங்கில் ஜனாதிபதியும் கலந்துகொள்வார்

லண்டன் வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் எதிர்வரும் 19ஆம் திகதியன்று நடைபெறும் எலிசபெத் மகாராணியின் இறுதிச் சடங்குகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துகொள்ள உள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு, நேற்று (11) அறிவித்தது.

தொடர்ச்சி P2

# கடவுச்சீட்டு விநியோகத்தில் முத்திரை முறைகேடு



குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள ஊழியர்களால் கடவுச்சீட்டு விநியோகிக்கும் போது முறைகேடுகள் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில், விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக திணைக்களம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# இ.தொ.காவுக்கு ஓர் அமைச்சு



■ எஸ்.கணேசன்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான அரசாங்கத்தில், மக்களுக்கு சேவையாற்றக் கூடிய ஓர் அமைச்சு கிடைக்குமென காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான ஏ.பி.சக்திவேல் நம்பிக்கை வெளியிட்டார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## ‘சிங்கள–பௌத்த நாடு’ நிலை மாறும்வரை நிலைமாற்றம் நிகழாது

இந்த சந்திப்பில் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள், சஜித் பிரேமதாச, மனோ கணேசன், எம். ஏ. சுமந்திரன், ரவுப் ஹகீம், தயாசிறி ஜயசேகர, ரிசாத் பதுர்தீன், ஹரிணி அமரசூரிய ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

இலங்கை பன்மை கலாச்சார நாடக அதிகாரபூர்வமாக உருவாவதற்கு அமெரிக்கா துணை இருக்க வேண்டும். இதன் மூலம் இனப்பிரச்சினை தீரும் வாய்ப்பு ஏற்படும். அது இலங்கை மக்களது நலனுக்கு மட்டுமல்ல, அமெரிக்கா, இந்தியா நலன்களுக்கும் வாய்ப்பானது.

நிர்க்கதியான மக்கள்

இலங்கையில் எல்லா காலத்திலும் மிகவும் நிர்க்கதியான பிரிவினராக தோட்ட தொழிலாளர்களே வாழ்கி ன்றனர். வறுமை, போசாக்கி ன்மை, சுகாதாரம், கல்வி, சிறுவர் தொழிலாளர், பெண்கள் மீதான அதீத சுமை ஆகியவை தொடர்பான புள்ளி விபரங்கள் தோட்ட தொழிலாளர் மத்தியிலேயே அதிகமாக இருக்கின்றன. இன்றைய நெருக்காடி நிலைமை அவர்களை மேலும் துன்பத்தில் தள்ளியுள்ளது.

நிர்க்கதியான மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் அரச நிர்வாக இயந்திரம் பாரபட்சமாக நடக்கிறது. எமக்கு அதன்மீது நம்பிக்கையில்லை. அங்கே அரசியலும், இனவாதமும் இருக்கின்றன. தோட்ட தொழிலாளர்கள் பெரும்பாலும் தமிழர்கள் என்ற காரணத்தால், அவர்களுக்கு உரிய நிவாரணங்கள் கிடைப்பதில்லை என்றும் எடுத்துரைத்தார்.

ஆகவே அமெரிக்கா உட்பட இலங்கைக்கு உதவிடும் நாடுகள் இதை கவனத்தில் எடுக்க வேண்டும். இலங்கைக்கு வழங்கும் உதவிகளை சிவில் நிறுவனங்கள் மூலம் வழங்குங்கள். அதுவும் கண்காணிக்கப்பட வேண்டும். உதவி பெறும் பிரிவினர் யார் என்பதை சரியாக அடையாளம் காண வேண்டும்.

இலங்கையில் உரம் வாங்கி மக்களுக்கு வழங்க யூஎஸ்எய்ட் நமது நாட்டு அரசுக்கு வழங்கும் 40மில்லியன் அமெரிக்க டொலர் உதவிக்கு நன்றி. ஆனால், இந்த 40மில்லியன் உதவி தொகையில் நமது மக்களுக்கு ஒரு டொலரும் கிடைக்காது. ஏனென்றால் தோட்ட தொழிலாளர்கள் விவசாய தொழிலாளர்கள் என்றாலும், சொந்த நிலம் இல்லாதவர்கள்.

தமிழ் அரசியல் கைதிகள்

பயங்கரவாத தடை சட்டத்தை வாபஸ் பெற சொல்வது நல்லதே. ஆனால், இந்த சட்டத்துக்கு பதில் இன்னொரு சட்டத்தை கொண்டு வந்த பின்னரே அரசாங்கம், பயங்கரவாத தடை சட்டத்தை வாபஸ் பெறும். ஆகவே உடன் தேவை, சட்டத்தை வாபஸ் பெற சொல்வதை விட, சட்டத்தின் அமுலாக்கலை இடை நிறுத்தம் செய்ய கூறுவதாகும்.

இன்று சில வாரங்களாக கைது செய்யப்படும், அரகல போராட்டக்காரர்களை விடுதலை செய்ய நாமும் கோருகிறோம். இவர்கள் சில வாரங்களாக கைது செய்யப்படுகின்றவர்கள். ஆனால், அதைவிட தமிழ் அரசியல் கைதிகள் நிலைமை படுமோசம். தமிழ் கைதிகள் 5,10,15, 20 வருடங்களாக சிறையில் இருக்கின்றவர்கள். சிலர் தீர்ப்பு வழங்கப்பட்டு தண்டனை அனுபவிக்கிறார்கள். இன்னும் சிலர் வழக்குகளை எதிர்நோக்கி உள்ளனர். இன்னமும் சில தொடர்ந்து தடுப்பு காவலில் உள்ளனர். இவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும். மீண்டும் வழக்குகள் தொடர கூடாது என்றும் எடுத்துரைத்தார்.

## கடலில் பயணித்த 84 பேர் சிக்கினர்

கடற்படை புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கமைய, நேற்று அதிகாலை மட்டக்களப்பு கடற்பரப்பில் கடற்படையினர் கண்காணிப்பில் ஈடுபட்ட போது, செங்கலடி கடல் பரப்பில் இயந்திரப்படகு ஒன்று பிரயாணிப்பதை கடற்படையினர் அவதானித்துள்ளனர். அந்தப் படகை சுற்றிவளைத்து சோதனையிட்டபோது அதில் சட்டவிரோதமாக அவுஸ்ரலியாவுக்கு பயணிக்க இருந்த 60 ஆண்கள், 13 பெண்கள் மற்றும் 18 வயதுக்கு உட்பட்ட 11 சிறுவர்கள் உட்பட 84 பேரை கடலில் வைத்து கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, முல்லைத்தீவு, திருகோணமலை மற்றும் மடு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என கடற்படையினர் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்களை, திருகோணமலை கடற்படை முகாமுக்கு அழைத்துச் சென்று, திருகோணமலை தலைமையக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு, நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

இதேவேளை, கடலில் காத்திருந்த இயந்திரப் படகுக்கு காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள நாவலடி கடற்கரையில் இருந்து 4 சிறிய யந்திரப்ப டகுகளில் சட்டவிரோத குடியேற்றக்காரர்களை ஏற்றிகொண்டு சென்று விடும் நடவடிக்கையில் ஈடுபட்டுக்

## 6 மாத கால அவகாசம்

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு தற்போது இலங்கை வந்துள்ள சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்தின் நிர்வாகி சமந்தா பவருடனான சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தேவையான தேர்தல் சீர்திருத்தங்கள் குறித்து தீர்மானம் எடுப்பதற்கு பாராளுமன்றத்துக்கு 6 மாத கால அவகாசம் வழங்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இல்லையெனின், சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி எத்தகைய முறைமை வேண்டும் என்பதை பொது மக்களிடம் கேட்கவுள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இதை அரசியல் கட்சிகள் என்றைக்கும் தள்ளிப் போட முடியாது என்றும் அவர்கள் விரும்பவில்லை என்றால், முக்கிய சீர்திருத்தங்கள் குறித்து வாக்கெடுப்புக்கு செல்லவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு தற்போது இலங்கை வந்துள்ள சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்தின் நிர்வாகி சமந்தா பவருடனான சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அரசியல் மற்றும் பொருளாதார மறுசீரமைப்புக்காக எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் மக்களுக்காக சமகாலத்தில் அவற்றை மேற்கொள்ள வேண்டு.ம்

சிவில் சமூகத்தினரின் சுதந்திரமான செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும் என ஜனாதிபதி அரசியல் வாக்குறுதி வழங்கியுள்ளார்.

அரசியல் அமைப்பு திருத்தம் கொண்டுவருவதானது சிறந்த வெளிப்படைத்தன்மையுடன் காணப்பட வேண்டும் என்பதுடன் இதன்மூலம் உண்மையான அரசியல் மறுசீரமைப்பு உருவாகும்.

அரசியல் மறுசீரமைப்பு என்பது ஒரு பொறிமுறையின் கீழ் உருவாக்கப்படுவது அவசியம்

அரசியல் மறுசீரமைப்பு மூலம் பொருளாதார சீரமைப்பை உறுதியாக முன்னெடுக்க முடியும்.அரசியல் மறுசீரமைப்பை முன்னெடுக்கும் போது, தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலை சாதாரண நிலைக்கு மாறும்.

வெளிநாட்டு முதலீடுகளை கவர்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும். அரசியல் சீர்திருத்த நிகழ்ச்சி நிரலும் பொருளாதார நிகழ்ச்சி நிரலும் கைகோர்த்துச் செல்வதாக தான் ஜனாதிபதி

## 20 மில்லியன் டொலர் உதவி

ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்ததாகக் குறிப்பிட்டார்.

அத்துடன் நீண்டகாலமாக பாதிக்கப்பட்ட மக்கள் பொறுப்பு கூறல், நல்லிணத்துக்காக காத்துக்கொண்டிருப்பதாகவும் அது தொடர்பில் கவனம் செலுத்துமாறும் ஜனாதிபதியிடம் வலிறுத்தியதாக கூறினார்.

தற்போது இலங்கையைப் பார்க்கவும் இங்குள்ள வாய்ப்புகளைப் பார்க்கவும் வர்த்தக சமூகத்தை ஈடுபடுத்த அமெரிக்கா முயற்சிப்பதாக அவர் கூறினார்.

“இலங்கையர்கள் எதிர்கொள்ளும் சவால்களுடன் ஒப்பிடுகையில், அது மிகச் சிறியது மற்றும் மிகவும் அடக்கமானது. ஆனால், சர்வதேச நிதி நிறுவனங்களில், தனியார் துறையுடன், இலங்கையை புதிதாகப் பார்த்து, எங்கு செல்வது என்று யோசித்துக்கொண்டிருக்கும் மற்ற நாடுகளுடன், எங்களால் முடிந்தவரை ஆக்கப்பூர்வமாக இருக்கவும் , எங்களுடைய கூட்டிணைக்கும் சக்தியைப் பயன்படுத்த விரும்புகிறோம், ”என்றார்.

இலங்கையின் துடிப்பான தனியார் துறையை முன்னிலைப்படுத்தி, தனியார் துறையின் திறனை வெளிக்கொணர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றார்.

இலங்கையுடனான நிலைப்பாட்டை ஜனாதிபதி ஜோன் பைடன் சார்பாக தான் தெரிவிப்பதாக சமந்தா பவர் தெரிவித்தார்.

“இலங்கையுடன் ஒன்றிணைவதற்கும், இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வதற்கும் நாங்கள் நிச்சயமாக இங்கு இருக்கிறோம். மேலும், நீங்கள் நீண்ட காலமாக முன்மொழியப்பட்ட மாற்றங்களைச் செய்ய முடியும், ”என்று அவர் மேலும் கூறினார்.

## ஒரு இலட்சம் கோடி ரூபாய் நட்டம்

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், இலங்கை மின்சார சபை, இலங்கை போக்குவரத்து சபை போன்றவை நட்டத்தை சந்திக்கும் பொது நிறுவனங்களில் முன்னணி நிறுவனங்களாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் இடம்பெற்ற பாராளுமன்ற உறுப்பிர்களுக்கான செயலமர்வின் போது, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க இந்த நட்டம் குறித்து தெளிவுபடுத்தியுள்ளார். நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சாரசபை போன்றவற்றை

## சகோதரனால் வன்புணர்வு; சகோதரி உயிர் மாய்ப்பு

சுன்னாகம் பொலிஸ் பிரிவில் நேற்று முன்தினம் (10) இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 20 வயது யுவதியே இவ்வாறு தன்னுயிரை மாய்த்து கொண்டுள்ளார்.

அவரது சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, போதைப்பொருள் பாவித்த மூத்த சகோதரன், தனது சகோதரியை வன்புணர்வுக்கு உள்படுத்தியுள்ளார். அதனால் விரக்தியடைந்த சகோதரி, நடந்தவற்றை குரல் பதிவில் பதிவுசெய்து, தனது நண்பிக்கு அனுப்பிவிட்டு, தனது உயிரை மாய்த்து கொண்டுள்ளார்.

## சட்ட நடவடிக்கை எடுக்க பஃப்ரல் தீர்மானம்

தேர்தலை ஒத்திவைக்கும் நடவடிக்கைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க தயாராகி வருவதாக பஃப்ரலின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் உள்ளிட்ட தேர்தலை ஒத்திவைப்பதற்கு தாம் ஆதரவாக இல்லை என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ஜி புஞ்சிஹேவா குறிப்பிட்டுள்ளார். தேர்தலை ஒத்திவைப்பதன் மூலம் மக்களின் இறைமைக்கு பாரிய சேதம் ஏற்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு நம்புவதாகவும் 20ஆம் திகதிக்குப் பிறகு உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த ஆணைக்குழுவுக்கு அதிகாரம் கிடைக்கும் என்றும் குறிப்பிட்டார்.

2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இ.தொ.காவுக்கு ஓர் அமைச்சு

கொட்டகலை சீ.எல்.எப் கேட்போர் கூடத்தில் நேற்று (11) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெருந்தோட்டப்பகுதிகளில் பல வருடங்களாக வாழ்ந்து வரும் மக்கள் பராமரித்து வந்த காணிகளில் வீடுகள் நிர்மாணிக்கும் பொழுதும், விவசாயம் செய்யும் பொழுதும் அந்த மக்களுக்கு தெரியாமலேயே தோட்ட நிர்வாகம் தான்தோன்றிதனமாக அரச சொத்தை மீள பெறல் என்ற சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தின் ஊடாக குறித்த மக்களை வெளியேற்றுகின்றனர். இவ்வாறு தோட்ட நிர்வாகம் செய்வது உரிமை மீறலாகும் என்றார்.

மக்களை இவ்வாறு வெளியேற்றும் செயல் குறித்து முறைபாடுகள் பல காங்கிரஸின் பொது செயலாளரும், நுவரெலியா மாவட்ட எம்.பியுமான ஜீவன் தொண்டமானுக்கு கிடைக்கப்பெற்றிருந்தது என்றார்.

## கடவுச்சீட்டு விநியோகத்தில் முத்திரை முறைகேடு

கடவுச்சீட்டை பெற்றுக் கொள்வதற்காக திணைக்களத்துக்கு வருகை தருவோரிடம் இலஞ்சம் பெற்றுக் கொண்டதன் பின்னர், போலியான அங்கிகார முத்திரைகள் வழங்கப்பட்டு வரிசையில் அனுப்பப்பட்டுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

## தமிழர்கள் நால்வர் ஜெனீவா விரைந்தனர்

அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.கே. கோடீஸ்வரன், வட மாகாண முன்னாள் மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன், மட்டக்களப்பு மாநகர சபை மேயர் தியாகராஜா சரவணபவன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் சேர்ந்த மாணவர் மீட்பு பேரவையின் தலைவர் செல்வராஜா கணேஷ் ஆகியோரே ஜெனீவா சென்றடைந்தனர்.

இதன்போது கருத்துரைத்த செல்வராஜா கணேஷ், “கடந்த காலங்களில் தொடர்ச்சியாக வடக்கு, கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்று வந்த மனித உரிமை மீறல்கள், இன அழிப்பு, அதற்கு சமாந்தரமாக இடம்பெற்ற படுகொலைகள் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கும் அநீதி, பாரபட்சம்,புறக்கணிப்பு பற்றி நாங்கள் பல தடவைகள் கூறியிருந்தோம். அதற்கு உரிய நீதி கிடைக்க வேண்டும்.

“தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும், தமிழ் உணர்வாளர்களும் இந்த நியாயமான கோரிக்கையை ஏற்கெனவே முன்வைத்து, நீதி கேட்டு இருந்தோம். இதுவரைக்கும் அந்த நீதி தமிழ் மக்களுக்கு கிடைக்கவில்லை.

“அதற்காக இம்முறை மனித உரிமை மாநாட்டு மண்டபத்துக்கு முன்பாக அனைவரும் கூடி கண்டன ஆர்ப்பாட்டம் செய்ய ஏற்பாடு செய்திருக்கின்றோம்.

“இலங்கை அரசுக்கு எதிராக அழுத்தத்தை அதாவது தமிழருக்கான நிரந்தர தீர்வு கிடைக்க வேண்டும், படுகொலைகளுக்கு உரிய நீதி கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் நாங்கள் ஒன்று கூடி ஒருமித்த குரலில் அங்கு தீர்மானம் எடுக்கவிருக்கின்றோம்” என்றார்.

## கூலிப்படையினர் மேற்கொண்டனரா?

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்துச் செய்யக் கோரி நாடளாவிய ரீதியில் வாகன வழிப் போராட்டமாக சென்று கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கை, யாழ்ப்பாணம் - மாவிட்டபுரத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை (10) ஆரம்பிக்கப்பட்ட போதே, அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “40 வருடங்களுக்கு மேலாக நீதி நியாயத்தை எதிர்பார்த்துப் போராடிய அனைத்துத் தரப்புகளுமே பயங்கரவாத தடை சட்டத்துக்கு எதிராக குரல் கொடுத்துள்ளனர்.

“சர்வதேச நாடுகளும் மனித நேய அமைப்புகளும் சட்டத்தை நீக்குவதற்கு அழுத்தங்களை கொடுத்த போதும் அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் எதையும் செய்ததாக இல்லை.

“ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் பயங்கரவாத தடை சட்டத்தை நீக்குவது தொடர்பாக அழுத்தங்கள் உருவாகியுள்ள நிலையில், உள்நாட்டில் கடந்த இரண்டு மாதங்களாக ஏற்பட்ட போராட்டங்களுக்கு பின்னர் ஒரு சூழல் உருவாகியுள்ளது.

“தற்போதுள்ள அரசாங்கம் போராட்டத்தில் ஈடுபட்டவர்களையும் போராட்டத்துக்கு தலைமை தாங்கியவர்களையும் அடக்குவதற்காக பயங்கரவாத தடைச்சட்டத்தை பாவிக்கின்ற நிலைமை உருவாகி உள்ளது. இது அவசரமாக தடுக்கப்பட

## கட்டத் தவறினால் துண்டிக்கப்படும்

மின் அதிகரிப்பு காரணமாக கட்டணத்தை செலுத்த முடியாது என்று ஓமல்பே சோபித தேரர், சனிக்கிழமை (10) எம்பிலிபிட்டியவில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்திருந்தார்.

தமது பிரதேச மக்களுக்காக இரவு 10 மணிவரை மின்விளக்குகளை ஒளிரச் செய்வதாகவும் 58 ஆயிரம் ரூபாயாக இருந்த மின் கட்டணம் தற்போது 3 இலட்சம் ரூபாயாக அதிகரித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

## மகாராணியின் இறுதிச் சடங்கில் ஜனாதிபதியும் கலந்துகொள்வார்

கொழும்பில் உள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்துக்கு நேற்று (11) முற்பகல் சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இரண்டாம் எலிசபெத் மகாராணியின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்துக்கு விஜயம் செய்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன் வரவேற்றார். பின்னர் அங்கு வைக்கப்பட்டிருந்த விசேட நினைவுப் புத்தகத்தில் அனுதாபக் குறிப்பை எழுதிய ஜனாதிபதி , 07 தசாப்தங்களாக இரண்டாம் எலிசபெத் மகாராணி, உலக மக்களுக்கு ஆற்றிய அளப்பரிய சேவையை நினைவுபடுத்தினார்.

மேலும், எதிர்வரும் 19ஆம் திகதியன்று லண்டன் வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் நடைபெறும் எலிசபெத் மகாராணியின் இறுதிச் சடங்குகளிலும் ஜனாதிபதி கலந்துகொள்ளவுள்ளார்.

## ஜெனீவா பறந்தனர் எதிர்க்கட்சி எம்.பிகள்

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான முஜிபுர் ரஹ்மான், கலாநிதி காவிந்த ஜயவர்தன மற்றும் சட்டத்தரணி எரந்த வெலியங்கே ஆகியோரே ஜெனீவாவுக்கு சென்றுள்ளனர்.

இலங்கையர்களுக்கு ஏற்பட்டுள்ள மனித உரிமை மீறல்கள் மற்றும் பொருளாதார நெருக்கடி குறித்து ஐ.நா மனித உரிமைகள் பேரவை கவலையடைவதாக காவிந்த எம்.பி தெரிவித்தார்.

இதேவேளை, இன்றையதினம் (12) ஆரம்பமாகவுள்ள பேரவையின் 51ஆவது அமர்வில் கலந்து கொள்வதற்கு வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தலைமையிலான இலங்கை பிரதிநிதிகள் குழு ஏற்கெனவே ஜெனீவா சென்றுள்ளது.

வெளிவிவகார அமைச்சருடன் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ விஜயம் செய்துள்ளதுடன், ஐக்கிய நாடுகளின்

‘பதிலளிக்கும் உரிமை’ தெரிவினூடாக

## 169 முறைப்பாடுகளை பத்திரிகை ஆசிரியர்கள் தீர்த்துள்ளனர்

தேசிய பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்கு 2021 ஆம் ஆண்டில் நேரடியாகக் கிடைத்திருந்த ‘பதிலளிக்கும் உரிமை’ தெரிவினூடாக, 169 முறைப்பாடுகளை தீர்த்துள்ளதுடன், இலங்கை பத்திரிகை முறைப்பாடுகள் ஆணைக்குழுவால் (PCCSL) பொது மக்களிடமிருந்து 57 முறைப்பாடுகள் தீர்த்திருந்ததுடன், அவற்றில் 16 முறைப்பாடுகள் அவர்களின் எல்லைக்கு அப்பாற்பட்டதாகவும் அமைந்திருந்தன.

இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் தொழில் நிபுணத்துவ ஒழுக்கக் கோவைச் செயன்முறையின் ‘பதிலளிப்பதற்கான வாய்ப்பு’ (பதிலளிக்கும் உரிமை) என்பதன் நான்காம் சரத்தின் பிரகாரம் பத்திரிகை ஆசிரியர்களால் அவர்களுக்குக் கிடைத்திருந்த முறைப்பாடுகள் தீர்க்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை பத்திரிகை முறைப்பாடுகள் ஆணைக்குழுவால் நடைமுறைப்படுத்தப்பட்ட பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் ஒழுக்கக்கோவையில், நிபந்தனைகளுடனான மூன்றாம் தரப்பு முறைப்பாடுகளை நிவர்த்தி செய்யும் உள்ளம்சங்கள் அடங்கியுள்ளன. சமூகக் குழுக்கள், விலங்கு நலன்புரி குழுக்கள், பருவமெய்தாதவர்களுக்கான வயது வந்தவர்கள், விபத்துக்குள்ளான நபரின் உடனடி குடும்ப அங்கத்தவர், தடுப்புக்காவலில் உள்ள நபரின் உடனடி குடும்ப அங்கத்தவர் மற்றும் பாதிக்கப்பட்ட நபரின் எழுத்து மூல அனுமதியைக் கொண்டு, முறைப்பாட்டை மேற்கொள்ளும் எந்தவொரு நபர் போன்ற ஆறு பிரிவுகளிடமிருந்து மூன்றாம் தரப்பு முறைப்பாடுகள் பெற்றுக் கொள்ளப்படுகின்றன.

2021 ஆம் ஆண்டுக்கான இலங்கை பத்திரிகை முறைப்பாடுகள் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை, அதன் பிரதம நிறைவேற்று அதிகாரி சுகுமார் ரொக்வுடால் 2022 செப்டெம்பர் 7 ஆம் திகதி இடம்பெற்ற zoom சந்திப்பின் போது வெளியிடப்பட்டது. இதில், 200 பிரசுர வெளியீட்டாளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுடன், 31 சந்திப்புகளை இலங்கை பத்திரிகை முறைப்பாடுகள் ஆணைக்குழு முன்னெடுத்திருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சிவில் சமூகத்தின் 485 அங்கத்தவர்களுடன் பதினாறு விழிப்புணர்வூட்டும் சந்திப்புகள் இடம்பெற்றுள்ளன.

சுயாதீன, தன்னார்வ, சுய-ஒழுங்குபடுத்தலுடன் இயங்கும் அமைப்பான இலங்கை பத்திரிகை முறைப்பாடுகள் ஆணைக்குழு, 2022 ஒக்டோபர் 15 ஆம் திகதி தனது 19 ஆவது வருட பூர்த்தியை கொண்டாடவுள்ளது. இலங்கை பத்திரிகைகள் சங்கம் (NSSL), இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம் (TEGOSL), சுதந்திர ஊடக இயக்கம் (FMM), இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கம் (SLWJA) ஆகியன இலங்கை பத்திரிகை முறைப்பாடுகள் ஆணைக்குழுவுக்கு ஆதரவளிக்கின்றன. ஊடகத் தொழிலாளர் தொழிற்சங்கங்களின் சம்மேளனம், இலங்கை முஸ்லீம் மீடியா போரம், இலங்கை தமிழ் ஊடக ஒன்றியம், தெற்காசிய சுதந்திர ஊடக சம்மேளனம் - இலங்கை பிரிவு ஆகியவற்றுடன் இணைந்து செயலாற்றுகின்றது.

இணக்கப்பாடு, நடுநிலை வகிப்பு, சமாதானப் பேச்சு போன்ற கொள்கைகளைப் பின்பற்றி செயற்பாடுகளை தனது செயலகம் மற்றும் முரண்பாடு தீர்ப்பு சம்மேளனத்தினூடாக (DRC) இலங்கை பத்திரிகை முறைப்பாடுகள் ஆணைக்குழு முன்னெடுக்கின்றது. இந்த முரண்பாடு தீர்ப்பு சம்மேளனம் ஆறு ஊடகவியலாளர் சாராத நபர்களைக் கொண்டுள்ளதுடன், தவிசாளரையும், ஐந்து ஊடகவியலாளர்களையும் கொண்டுள்ளது. இதன் தலைமைப் பொறுப்பை, முன்னாள் பாராளுமன்ற செயலாளர் நாயகமும், வழக்குரைஞருமான நிஹால் செனெவிரட்ன வகிக்கின்றார். ஊடகவியலாளர்கள் அல்லாத அங்கத்தவர்களாக, ஜாவிட் யூசுவ், டியொன் ஸ்கூர்மன், லுசிலி விஜேவர்தன, ஞானா முனசிங்க, கலாநிதி ஏ.சி விஸ்வலிங்கம் ஆகியோர் அடங்குகின்றர். ஊடகவியலாளர்களான சிறி ரணசிங்க, பி.பாலசிங்கம், பிரமோத் டி சில்வா, டி.எம்.எல். அன்ட்ரீ, நிலந்த மதுரவல ஆகியோர் அடங்கியுள்ளனர்.

ஒன்பது பணிப்பாளர் சபை அங்கத்தவர்களில், குமார் நடேசன் (தவிசாளர், இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தால் பிரேரிக்கப்பட்டவர்), சிங்ஹ ரணதுங்க (பிரதி தவிசாளர், இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தால் பிரேரிக்கப்பட்டவர்), நிமல் வெல்கம (இலங்கை பத்திரிகைகள் சங்கத்தால் பிரேரிக்கப்பட்டவர்), தாஹா முஸம்மில் (சுதந்திர ஊடக இயக்கத்தால் பிரேரிக்கப்பட்டவர்), மனிக் டி சில்வா (இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தால் பிரேரிக்கப்பட்டவர்), பிராங்க் டி சொய்ஸா (இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கத்தால் பிரேரிக்கப்பட்டவர்) ஆகியோர் zoom ஊடாக இடம்பெற்ற சந்திப்பின் போது மீண்டும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். தர்மன் விக்ரமரட்ன, என்.எம்.அமீன், மோஹன்லால் பியதாஸ ஆகியோர் இலங்கை பத்திரிகை முறைப்பாடுகள் ஆணைக்குழுவின் பொது அங்கத்துவத்துக்காக zoom ஊடாக இடம்பெற்ற சந்திப்பின் போது மீண்டும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

இலங்கை பத்திரிகை முறைப்பாடுகள் ஆணைக்குழுவின் கணக்காய்வாளர்களாக ஏர்னஸ்ட் அன்ட் யங் மற்றும் கோர்பரேட் சேர்விசஸ் (பிரைவட்) லிமிடெட் செயலாளர்களாகவும் zoom ஊடாக இடம்பெற்ற சந்திப்பின் போது மீண்டும் தெரிவு செய்யப்பட்டிருந்தன.

# ரணிலுக்கு மறதி

ராஜபக்ஷர்களின் ஆசியுடனேயே ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதியானார் என்பது உண்மையே என்றாலும், முன்னாள் ஜனாதிபதியும் முன்னாள் பிரதமரும் வீட்டுக்கு அனுப்பப்பட்டது இந்நாட்டின் பொது மக்கள் போராட்டத்தாலேயே என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மறந்துவிட்டதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தெஹிவளை தேர்தல் தொகுதிக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய சஜித், இதனை ஜனாதிபதி நினைவில் வைத்திருந்தால், அவரால் இவ்வளவு கடுமையாக அடக்குமுறையை அமல்படுத்த



முடியாது. மோசமான ஆட்சி மிக்க அரசாங்கத்தை மாற்றுவதற்கு கொள்கை ரீதியாக தலையிட்டதற்காக, கடந்த மே மாதம் 09 ஆம் திகதிக்கு பின்னர் 3,500 இக்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டுள்ளனர். 1,200 இக்கும் அதிகமானோர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தற்போதைய அரசாங்கம் முழு நாட்டு மக்களையும் மரணப் படுக்கைக்கு தள்ளிக்கொண்டு வருகிறது. டைட்டானிக் கப்பலைப் போல நாடு மூழ்கும் போது, அரசாங்கம் அந்த அவல நிலையிலும் கூட, சுய நினைவிழந்தது போல களியாட்டம் ஆடி மகிழும் கேளிக்கை நடனமாடுவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

## புதிய நியமனங்கள் 2023 இல் இல்லை

அரச சேவைக்கு அடுத்த வருடம் எவரையும் புதிதாக இணைத்துக்கொள்ள வேண்டாமென அனைத்து அரச நிறுவனத் தலைவர்களுக்கும் திறைசேரியின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன அறிவித்துள்ளார்.

அரச சேவைக்குப் புதிதாக எவரும் இணைத்துக்கொள்ளப்பட




மாட்டார்கள் என்பதால், அதற்கான நிதி ஒதுக்கீடுகள் எதுவும் மேற்கொள்ளப்படாது எனவும் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நாட்டு மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்குக் கொண்டுவருதல், பொருளாதாரம் மேலும் மோசமடைதலை தடுத்தல், பொருளாதார வளர்ச்சிக்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காகவே, அரச சேவையில் புதிதாக எவரையும் இணைத்துக் கொள்ளாதிருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## கோட்டாவை நாங்கள் சந்திக்க மாட்டோம்

நாடு திரும்பியுள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை இதுவரையில் சந்திக்கவில்லை என தெரிவிக்கும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ், கோட்டாவை சந்திக்கும் நோக்கம் தமக்கு இல்லை என்றார்



கடந்த தேர்தலில் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளையா செய்து கொண்டிருக்கிறோம் என மனசாட்சியை தொட்டு கூற வேண்டும் எனவும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவினரிடம் கேட்டுகொண்டார்.

பொதுஜன பெரமுனவில் இருந்து சுயாதீனமாக இயங்க தீர்மானித்துள்ள 13 எம்பிக்ளில் பலர் பேராசிரியர்களாகவும், வைத்தியர்களாகவும் கல்வி கற்றவர்களாக இருக்கிறார்கள். எனவே எங்களது சுயாதீன அணி மீது மக்களுக்கு நம்பிக்கை இருப்பதாகவும் தெரிவித்தார்.


22ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் எவரும் பேசுவதில்லை. இது தொடர்பில் அமைதி நிலவுகிறது. சில சில இடங்களில் இதனை மறைக்கப் பார்க்கிறார்கள். 22ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றக்கூடாது என்பதில், சிலருக்குப் பிரச்சினை இருக்கிறது. இரட்டைக் குடியுரிமைக் கொண்டவர்களுக்கே இதில் பிரச்சினைகள் இருப்பதாகவும் தெரிவித்தார்.

## மார்ட்டின் சுன்கொங் ஜனாதிபதியை சந்திப்பார்



இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் அனைத்துப் பாராளுமன்ற ஒன்றியத்தின் செயலாளர் நாயகம் மார்ட்டின் சுன்கொங், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஸ் குணவர்தன, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோரை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

பாராளுமன்ற சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்தவையும் அவர் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.




## நெருக்கமானவர்களுக்கு 60 நிலையங்கள் பகிர்ந்தளிப்பு

கடந்த 3 வருடக் காலப் பகுதிக்குள் அரசியல்வாதிகள், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உயர் அதிகாரிகளின் உறவினர்கள் என 60 பேருக்கு எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தபானத்தின் கீழ் இதுவரையில் 1,343 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் காணப்படுகின்றன.

இவ்வாறான நிலையில் முன்னாள் அரசியல்வாதிகளுக்கும் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

## ஒக். 25இக்கு பின்னர் 7 மணி நேர மின்வெட்டு

ஒக்டோபர் 25ஆம் திகதிக்கு முன்னர் நிலக்கரியைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்றால், நாளொன்றுக்கு 7 மணித்தியால மின்வெட்டுக்கு நாடு முகங்கொடுக்க நேரிடும் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

நீர், எரிபொருள் கிடைக்கும் அளவைப் பொறுத்து மின்வெட்டு அமல்படுத்தப்படும் நேரங்களில் மாற்றம் ஏற்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தலைவர் ஜனக ரத்நாயக்க, நிலக்கரி கிடைக்கவில்லை என்றால் நுரைச்சோலை அனல்மின் நிலையம் முழுமையாக மூடப்படும். இதனால், தேசிய மின்கட்டமைப்புக்கு 900 மெஹாவோட் இழப்பு ஏற்படுவதற்கான பாரிய ஆபத்து இருப்பதாகவும் தெரிவித்தார்.

தேசிய மின்கட்டமைப்புக்கு நுரைச்சோலை அனல்மின் நிலையத்திடமிருந்து




**நீர்மின் உற்பத்திக்கு நீரைப் பெற்றுக் கொள்வதில் பிரச்சினை, நிலக்கரியில் இருந்து மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ள முடியாமை உள்ளிட்டக் காரணங்களால், மின்வெட்டு அமல்படுத்தப்படும்**

நூற்றுக்கு 40 சதவீதம் கிடைத்து வருகிறது. ஒக்டோபர் 25ஆம் திகதிக்குப் பின்னர் இதனை முழுமையாக இழக்கும் அபாயம் காணப்படுவதாகவும் அவர் எச்சரித்தார்.

எரிபொருளைப் பெற்றுக்கொள்வதில் காணப்படும் பிரச்சினை, நீர்மின் உற்பத்திக்கு தேவையான நீரைப் பெற்றுக்கொள்வதில் காணப்படும் பிரச்சினை, நிலக்கரியில் இருந்து மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ள முடியாமை உள்ளிட்டக் காரணங்களால், மின்வெட்டு அமல்படுத்தப்படும் உரிய காலத்தை அறிவிக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

தேசிய மின்கட்டமைப்புக்கு நீர்மின் உற்பத்தியின் ஊடாக 85 சதவீதமான மின்சாரம் கிடைத்து வருகிற நியைில், எதிர்காலத்தில் அதன் அளவும் குறையும் எனவும் தெரிவித்தார்.



## சஜித் அணியினர் தூய்மையானவர்கள்

ரஞ்சித் ராஜபக்ஷ

பொருளாதாரம் உள்ளிட்ட நாட்டின் அனைத்துத் துறைகளையும் கட்டியெழுப்புவதற்கான திறமையானவர்கள் ஐக்கிய மக்கள் சக்தியிடமே இருக்கின்றனர் என அக்கட்சியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி தெரிவித்தார்.

உலகளவில் மந்தபோசனையில் ஐந்தாவது இடத்திலும், அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிக்கும் நாடுகளின் வரிசையில் இலங்கைக்கு இரண்டாவது இடம் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

உலகில் உள்ள பலம்வாய்ந்த நாடுகள் கூட ஒரே தடவையில் இரசாயன உரத்தை தடை செய்யவில்லை. எரிபொருள் வரிசைகளை குறைப்பதாக கூறிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எரிபொருளை நிரப்பிக்கொள்ள மக்களிடமிருந்த பணத்தைப் பறித்துள்ளார்.

ஊழல் குற்றச்சாட்டுகள் அற்ற தூய்மையானவர்களே எமது அணியில் இருக்கிறார்கள் பொதுஜன பெரமுன 6 அணிகளாக பிரிந்துள்ளது எனவும் தெரிவித்தார்.

## ஈடு செய்ய முடியாத இழப்பு

கொழும்புத் தமிழ் சங்கத்தின் முன்னாள் தலைவரான சட்டத்தரணி குழந்தைவேலு இராஜகுலேந்திராவின் மறைவு, கொழும்பு தமிழ்ச் சங்கத்துக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பு என அச்சங்கம் தெரிவித்துள்ளது.

தமிழுக்கும் தமிழ் உலகுக்கும் ஈடு செய்ய முடியாத பெரும் இழப்பு தங்களுக்கும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக கொழும்பு தமிழ்ச் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2004ஆம் ஆண்டு ஆயுட்கால உறுப்பினராக இணைந்துகொண்ட இராஜகுலேந்திரா, 2018ஆம் ஆண்டு தமிழ்ச் சங்கத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

சட்டத்தரணியான இராஜகுலேந்திரா மத்திய மாகாண சபை உறுப்பினராக மலையக மக்களுக்கும் பெரும் சேவையாற்றினார் எனவும் தமிழ்ச் சங்கம் தெரிவிக்கிறது.

### மகாகவியின் நினைவு தினம்

# யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிப்பு

**வி.நிதர்ஷன்**

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 101ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வு, யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

நல்லூரில் அமைந்துள்ள பாரதியாரின் உருவச்சிலை அமைந்துள்ள பகுதியில் நேற்று (11) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12 மணியளவில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு, மரியாதை செலுத்தப்பட்டது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம் கே சிவாஜிலிங்கம், சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன், வலி. கிழக்கு பிரதேச சபை தவிசாளர் நிரோஷ் மற்றும் வலி. மேற்கு பிரதேச சபை தவிசாளர் நடனேந்திரன் உள்ளிட்ட சிலர் இதில் கலந்துகொண்டனர்.







### ஆறு இலட்சம் பேர் பட்டினி:

# இராஜாங்க அமைச்சர்கள் தேவையா?

**ஹஸ்பர்**

நாட்டில் ஒரு வேளை உணவின்றி 6 இலட்சம் பேர் பட்டினியால் வாடுவதாக உலக உணவு ஸ்தாபனம் அறிக்கை வெளியிட்டுள்ள நிலையில், 37 இராஜாங்க அமைச்சர்களின் நியமனம் தேவையா என நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் கிண்ணியா நகர சபை உறுப்பினர் எம்.எம்.நசுருதீன் கேள்வியெழுப்பினார்

கிண்ணியாவில் நேற்று (11) நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு கேள்வியெழுப்பினார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்துரைக்கையில், நாட்டு மக்கள் மீது அக்கறை செலுத்தாத பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாதளவுக்கு இராஜாங்க அமைச்சர்களின் நியமனம் வேதனையளிக்கிறது.



“அன்றாட வாழ்வாதாரத்துக்குத் தடுமாறும் அப்பாவி மக்களின் நிலையை கருத்திற்கொள்ளாது, அரசாங்கம் சார்ந்த கட்சிப் பிரதிநிதிகளுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்கி கட்சிகளை கட்டியெழுப்பக் காட்டும் கரிசணை நாட்டின் மீதும் மக்கள் மீதும் காட்டவில்லை.

“யுத்தத்தின் பின் மகிழ்ச்சியான வாழ்வு வாழக் கனவு கண்ட மக்களின் நிலை தற்போது சின்னா பின்னமாகியுள்ளது. இந்நிலை தொடருமானால் மக்களின் நிலைமை மேலும் மோசமடையும். இராஜாங்க அமைச்சுகளை வழங்குவதன் மூலம் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாது. மக்கள் நலனில் அக்கறை செலுத்த முன்வாருங்கள்” என்றார்.





### அரசியல் கைதிகளின்

## உறவுகளுக்கு வரவேற்பு

**க.அகரன்**

அரசியல் கைதிகளை பார்வையிடுவதற்காக கொழும்பு நோக்கிப் பயணித்த அரசியல் கைதிகளின் உறவுகளை, வவுனியாவில் வரவேற்று, உணவளித்து வழியனுப்பி வைத்த நிகழ்வு, நேற்று முன்தினம் (10) நடைபெற்றது.

பல வருடங்களாக உறவுகளை சந்திக்காமல் சிறையில் வாடும் வட மாகாணத்தை சேர்ந்த அரசியல் கைதிகளை பார்வையிடுவதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்த அரசியல் கைதிகளின் உறவுகளுக்கே இவ்வாறு உணவளிக்கப்பட்டது.

அத்துடன், வவுனியாவில் தமிழ் விருட்சம் அமைப்பின் ஏற்பாட்டில், மாலை நேர தேநீர் உபசாரமும் இரவு உணவும் வழங்கி வைக்கப்பட்டது.

‘உறவுகளுக்கு கரம் கொடுத்து, உயிர்ப்புடன் சிறை மீட்போம்’ எனும் தொனிப்பொருளில், குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒழுங்குபடுத்தலில், வவுனியா கந்தசுவாமி கோவிலுக்கு வருகைதந்த அரசியல் கைதிகளின் உறவுகளை வரவேற்று, சிறப்பு வழிபாடுகளுடன் உபசரித்து வழியனுப்பப்பட்டனர்.

இந்த நிகழ்வில் தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் செ.சந்திரகுமார் (கண்ணன்), வவுனியா கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தா சபை செயலாளர் பா.சுந்தர்ராஜன் (குமார்) உள்ளிட்ட சமூக ஆர்வலர்கள் கலந்துகொண்டனர்.



# கோவில் திருவிழாவில் வாள்வெட்டு, அடிதடி

### பெண்கள் உட்பட 9 பேர் கைது

**க.அகரன்**

வவுனியா, பொன்னாவரசன்குளம் கோவில் வருடாந்த திருவிழாவின் போது இடம்பெற்ற வாள்வெட்டு மற்றும் அடிதடி தொடர்பில் பெண்கள் இருவர் உட்பட 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, பொன்னாவரசன்குளம் பிள்ளையார் கோவிலின் வருடாந்த திருவிழாவின் கொடி இறக்கத்துக்கான பூசைகள், வெள்ளிக்கிழமை (09) நடைபெற்ற போது, அங்கு வந்த ஒரு குழுவினருக்கும், கோவிலில் நின்றவர்களுக்குமிடையில் கைகலப்பு ஏற்பட்டது.

இதன்போது இடம்பெற்ற வாள்வெட்டு மற்றும் அடிதடி காரணமாக நால்வர், வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கோவில் நிர்வாகத்தினர் உட்பட 20 இற்கு மேற்பட்டவர்கள் அழைக்கப்பட்டு, விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டதுடன், அவர்களில் சம்பவம் தொடர்பில் இரு பெண்கள் உட்பட 9 பேர் கைது செய்யபப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை நெளுக்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### அட்டாளைச்சேனையில்

## தொடர்ந்தும் பைஸர் தடுப்பூசி ஏற்றல்



**எம்.எஸ்.எம். ஹனீபா**

அட்டாளைச்சேனை சுகாதார வைத்தியதிகாரி பிரிவில் கொவிட்-19 பைஸர் தடுப்பூசி தொடர்ந்து ஏற்றப்பட்டு வருவதாக, அட்டாளைச்சேனை சுகாதார வைத்தியதிகாரி டொக்டர் ஏ.எம். இஸ்மாயில், நேற்று (11) தெரிவித்தார்.

இதுவரை எதுவித தடுப்பூசிகளையும் பெற்றுக் கொள்ளாதவர்கள் தங்களுக்கான தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

முதலாவது தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்கள், இரண்டாவது தடுப்பூசியையும், இரண்டாவது தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்கள் மூன்றாவது தடுப்பூசியையும் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுள்ளார்.

கொவிட்-19 மூன்றாவது தடுப்பூசி பெற்ற 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 04ஆவது பைஸர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

சகல பாடசாலைளிலும் 12 தொடக்கம் 15 வயது வரையிலான முதலாவது தடுப்பூசியைப் பெற்றுக் கொண்ட மாணவர்களுக்கு, பைஸர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

வெளிநாடு செல்பவர்களுக்கு கொவிட்-19 பைஸர் தடுப்பூசியை கட்டாயம் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும், பொதுச் சுகாதார பரிசோதகர்களைத் தொடர்புகொண்டு தமக்கான தடுப்பூசியை பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுள்ளார்.



# ‘பன்னாட்டு குற்றங்கள்’

### நூல் வெளியீடு

**கீத்**

கலாநிதி ஸ்ரீ ஞானேஸ்வரனால் எழுதப்பட்ட ‘பன்னாட்டுக் குற்றங்கள்’ எனும் நூல், திருகோணமலையிலுள்ள ஜுபிலி மண்டபத்தில் நேற்று (11) வெளியிடப்பட்டது.

காலை 10 மணியளவில் சுடரேற்றல் மற்றும் அகவணக்கத்துடன் ஆரம்பமான இந்நிழ்வுக்கு, திருகோணமலை மாவட்ட ஆயர் வண. கலாநிதி நோயல் இம்மானுவேல் தலைமை தாங்கினார்.

அவரது தலைமை உரையைத் தொடர்ந்து, வருகையாளர்களுக்கு நூல்கள் கையளிக்கப்பட்டன.

யாழ்ப்பாண பல்கலைக்கழக அரசியற்றுறைத் தலைவர் நூலை மதிப்பாய்வு செய்து உரையாற்றியதுடன், இந்நூலின் முக்கியத்துவம் பற்றியும் தன் உரையில் குறிப்பிட்டார்.

அதைத் தொடர்ந்து நூலாசிரியரின் ஏற்புரையும் நன்றியுரையும் இடம்பெற்றது.

இந்நூலானது ஆங்கிலம், ஜேர்மன், டொச், சிங்களம் முதலான மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐஸ் போதைப்பொருளை கடத்திய நபர் கைது

**எம்.எஸ்.எம்.நூர்தீன்**

ஏறாவூரிலிருந்து காத்தான்குடிக்கு ஐஸ் போதைப் பொருளை கடத்திய நபரை கைது செய்துள்ளதுடன், அந்நபரிடமிருந்து 10 கிராமும் 150 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளை மீட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடி பொலிஸ் நிலைய விசேட பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய, காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயணசிறியின் ஆலோசனைக்கமைய, குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ரஹீமின் வழ்காட்டலில் விசேட பொலிஸ் குழுவினர், சந்தேகநபரை கைதுசெய்துள்ளனர்.



சந்தேகநபரையும் கைப்பற்றப்பட்ட ஐஸ் போதைப்பொருளையும் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் இது தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகவும் காத்தான்குடி பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

### வட்டுக்கோட்டையில்

## அம்பூலன்ஸ் சாரதி மீது தாக்குதல்

**எம்.றொசாந்த்**

நோயாளியை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்ற அம்பூலன்ஸ் வாகனத்தின் சாரதியை தாக்கிய நபரொருவரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு, மல்லாகம் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் திடீரென சுகவீனமுற்ற நிலையில், அம்பூலன்ஸுக்கு அறிவித்து, அம்பூலன்ஸ் மூலம் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அதன்போது வீதியில் அம்பூலன்ஸை வழிமறித்த அதே பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர், சாரதியை சரமாரியாக தாக்கி விட்டு தப்பிச் சென்றார்.

இந்தச் இம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதன் அடிப்படையில், விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், சாரதியை தாக்கிய இளைஞன் ஒருவரை கைது செய்து மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தினர்.



### காரைநகர் – ஊர்காவற்றுறை

## பாதை சேவையை சீரமைக்கவும்

**எம்.றொசாந்த்**

காரைநகர் - ஊர்காவற்றுறை பாதைச் சேவையை சீராக இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு, இப்பாதையூடாக போக்குவரத்துச் செய்யும் அரச உத்தியோகத்தர்களும் பொதுமக்களும் வடக்கு மாகாண ஆளுநரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக இப்பாதைச் சேவை இடம்பெறாமையால் தாங்கள் பெரும் பாதிப்புகளை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவித்துள்ள அவர்கள், வீதி அபிவிருத்தி அதிகார சபை இவ்விடயத்தில் அசமந்தப் போக்கை கடைப்பிடிக்கின்றது எனவும் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநருக்கு அவர்கள் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: ‘அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானோர் தினமும் இப்பாதை ஊடாகவே பயணத்தை மேற்கொள்கின்றோம். எரிபொருள் இன்மையைக் காரணம் காட்டி கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக பாதைச் சேவை இடம்பெறவில்லை. எனவே, பாதைச் சேவை தடையின்றி சீராக நடைபெற ஏற்பாடு செய்து தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்’ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

### தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில்

## இதழியல் கற்கைநெறியை மீண்டும் ஆரம்பிக்கவும்

**நூருல் ஹுதா உமர்**

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூவக்கர், சிலோன் மீடியா போரத்தின் தலைவர் கலாநிதி றியாத் ஏ.மஜீத் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு, உபவேந்தர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பின் போது, தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் இதழியல் கற்கை நெறியை மீண்டும் ஆரம்பிக்குமாறு, சிலோன் மீடியா போரத்தின் தலைவர் கோரிக்கை விடுத்தார்.

இக்கற்கை நெறியை மேற்கொள்வதற்கு ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகத்துறையை விரும்புபவர்கள் ஆர்வமாக இருப்பதாக தன்னிடம் தெரிவித்துள்ள நிலையிலேயே, இக்கோரிக்கையை முன்வைப்பதாக உபவேந்தரிடம் றியாத் ஏ.மஜீத் சுட்டிக்காட்டினார்.

இதனையடுத்து, சிலோன் மீடியா போரத்தின் இக்கோரிக்கையை ஏற்று இன்னும் ஓரிரு வாரங்களில் இதழியல் கற்கை நெறிக்காக விண்ணப்பம் படிவங்கள் கோரப்படவுள்ளதாக உபவேந்தர் உறுதியளித்தார்.

அதேவேளை, பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூவக்கர் பதவியேற்று ஒரு வருடப் பூர்த்தியை நினைவுகூர்ந்து நினைவுப் பரிசொன்றை, சிலோன் மீடியா போரத்தின் சார்பில் றியாத் ஏ.மஜீத் வழங்கிவைத்தார்.

## பாராட்டு விழா

















மத்திய மாகாணம், வத்தேகம கல்வி வலயத்திலுள்ள விக்னேஸ்வரா விஞ்ஞான பாடசாலை மாணவர்களுக்கான பாராட்டு விழா, அதிபர் ஆர் கோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட டபிள்யூ. எம். டீ. என் குணரட்ண மங்கள விளக்கேற்றி வைத்து உரையாற்றுவதையும் பல்கலைக்கழகத்துக்குப் பிரவேசித்த மாணவர்கள், புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள், பாடசாலையின் மாணவத் தலைவர்கள் ஆகியோர் பாராட்டப்பட்டனர்.

(மெய்யன்)



### மரக்கறிகளின் விலை அதிகரிப்பால்

# விற்பனை வீழ்ச்சி

■ ரஞ்சித் ராஜபக்‌ஷ

அண்மைய நாள்களாக நிலவும் சீரற்ற வானிலை காரணமாக, உள்ளூர் சந்தையில் மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ளமையால் தமது மரக்கறி வியாபாரம் குறைந்துள்ளதாக ஹட்டன் பிரதேசத்தில் உள்ள மரக்கறி மொத்த வியாபாரிகள் மற்றும் சில்லறை விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கடைகளுக்குத் தேவையான காய்கறி இருப்புகளைப் பெறுவதற்கு அதிக செலவு செய்ய வேண்டியுள்ளதாகவும், அதனால் கிடைக்கும் இலாப சதவீதம் வெகுவாகக் குறைந்துள்ளதாகவும் வியாபாரிகள் கூறுகின்றனர்.

இதற்கமைய, போஞ்சி கிலோ கிராம் ரூ.600, கரட் ரூ.400, கறி மிளகாய் ரூ.800, கத்தரிக்காய் ரூ.400, முட்டைகோஸ் ரூ.320, வெண்டைக்காய் ரூ.240, பீட் ரூ.200 க்கு விற்பனைச் செய்யப்படுகின்றது. அத்துடன், அனைத்து மரக்கறிகளின் விலைகளும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

உள்ளூர் சந்தையில் ஒரு கிலோ கிலோகிராம் வெள்ளரிக்காய் 120 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதால், அதற்கான கிராக்கி அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.





## பெறுபேற்றில் திறமை

க.பொ.த உயர் தர பரீட்சையில் மஸ்கெலியா சென் ஜோசப் தேசிய கல்லூரியில் கல்வி பயிலும், மாணவியான சத்தியமூர்த்தி தம்பதிகளின் புதல்வி சத்தியபிரஷாலனி கலைப்பிரிவில் மூன்று ஏ திறமை சித்திகள் பெற்று மாவட்ட மட்டத்திலும் தேசிய கல்லூரி மட்டத்திலும் சாதனை படைத்துள்ளார்.

இலங்கையில் தலைசிறந்த சட்டத் தரணியாகவும், உயர் நீதிமன்ற நீதியரசராகவும் பணியாற்ற வேண்டும் என்பதே இந்த மாணவியின் எதிர்கால இலட்சியமாகும்

தரம் 5 புலமை பரீட்சையில் சித்திபெற்று மஸ்கெலியா புளும்பீல்ட் தேசிய கல்லூரிக்கும் அதேபோல் சாதாரண தரத்தில் 9 ஏ சித்திகள் பெற்று பொகவந்தலாவ சென்.மேரிஸ் மத்திய கல்லூரிக்கும் பெருமையை தேடித்தந்தவர்இவராவார்.

கல்வியில் மட்டுமன்றி, விளையாட்டுத்துறையிலும் மத்திய மாகாண மட்டம் வரையிலும் தனது திறமையை வெளிக்காட்டியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## விபத்தில் மூன்று இளைஞர்கள் பலி

### 18 வயதான சாரதி கைது

■ என் ஆராச்சி

கொழும்பு- கண்டி வீதியின் கேகாலை, ரங்வல பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் உயிரிழந்த மூவரின் ஜனாஸாக்கள் நேற்றுமுன்தினம் (10) மாலை நல்லடக்கம் செய்யப்பட்டது.

9ஆம் திகதி இரவு 10.15 மணியளவில் இடம்பெற்ற விபத்தில், மூவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், இருவர் கேகாலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவத்தில் வரக்காப்பொல, துல்ஹிரிய, நங்கல்ல பகுதியைச்



சேர்ந்த எம்.ஆர்.எம் ரஹ்மி, எம்.எம்.எம். மிஃப்லால், எம்.எம்.எம் மனசிக்கான் ஆகிய மூவரும் உயிரிழந்தனர். மூவரும் 27 வயதானவர்கள்.


கொழும்பில் இருந்து கண்டி நோக்கி 9 ஆம் திகதி இரவு பயணித்த வான், எதிர் திசையில் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதனையடுத்து, தெமட்டகொட பகுதியைச் சேர்ந்த 18 வயதான வானின் சாரதி, கேகாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### பஸ்ஸுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில்

## இருவர் காயம்

■ ராமு தனராஜா




பிபிலையிலிருந்து லுணுகலை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் இருவர் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

லுணுகலையிலிருந்து கொக்காகலை நோக்கி சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளானது, கைக்காட்டி சந்தியில் வைத்து, பஸ்ஸுடன் மோதியுள்ளது.

இந்த விபத்தில் 25,30 வயதுடைய 2 இளைஞர்கள் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில், லுணுகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக பதுளை போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அதி தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

குறித்த இருவரும் லுணுகலை பிரதேசத்தில் உள்ள ஆலயம் ஒன்றில் நடைபெற்ற உற்சவத்தில் கலந்து கொண்ட பின்னர், வீடு திரும்பும் போது இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இதனையடுத்து பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை பதுளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சிறுவனின் மரணத்தில் சந்தேகம்

### விசாரணைகளை தீவிரப்படுத்தியுள்ள பொலிஸார்



■ ரஞ்சித் ராஜபக்ஸ

பாடசாலை மாணவனான், சிறிய கால்வாயில் தவறி விழுந்து உயிரிழந்ததாக கூறப்படும் சம்பவம் தொடர்பில், நாவலப்பிட்டி பொலிஸார் பல கோணங்களில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஹரங்கல தேசிய பாடசாலையில் 10ஆம் ஆண்டில் கல்வி கற்கும் நாவலப்பிட்டி கிரிமதியாவ பிரதேசத்தை சேர்ந்த 15 வயதுடைய அஷேன் மின்சரா என்ற மாணவனே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த மாணவன் தனது வீட்டிற்கு குடிநீர் வரும் நீர் குழாய்களை சீர் செய்வதற்காக இந்த மாதம் 9ஆம் திகதி, காலை 7 மணியளவில் வீட்டிலிருந்து கால்வாய்க்குச் தனியாகச் சென்றுள்ளார்.

நீண்ட நேரமாகியும் சிறுவன் திரும்பிவராததால், சிறுவனின் தாயும் சகோதரனும் தேடியபோது, சிறுவன் கால்வாயில் சடலமாக கிடப்பதை கண்டு நாவலப்பிட்டி பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

அத்துடன் பிரதேசவாசிகளின் உதவியுடன், சிறுவன் நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

சிறுவன் கால்வாயில் தவறி விழுந்து உயிரிழந்திருக்கலாம் என சந்தேகிக்கும் நாவலப்பிட்டி பொலிஸார் மரணம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கர்ப்பிணிகளுக்கு போசாக்கு பொதி

■ ஒ. டி.சந்ரு

நானுஓயா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நானுஓயா பிரதேசத்தில் 40 கர்ப்பிணிகளுக்கு போசாக்கு உணவு வழங்கும் வேலைத்திட்டம் நுவரெலியா பிரதேச சபை புதிய கட்டடத்தில் நேற்று (11) நடைபெற்றது.

நானுஓயா பிரதான நகரில் உள்ள வர்த்தகரான திருச்செல்வம் கண்ணா என்பவரால் வழங்கப்பட்ட இந்த உணவு பொதிகளில் கர்ப்பிணிகளுக்குத் தேவையான போசனைப் பொருட்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

இந்நிகழ்வில், நானுஓயா பொலிஸ் பொறுப்பதிகாரி, நுவரெலியா பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## ஒடிசி ரயிலில் சனக்கூட்டம்

■ ரஞ்சித் ராஜபக்‌ஷ

கொழும்பு, கோட்டையிலிருந்து பதுளை நோக்கிச் செல்லும் எல்ல ஒடிசி சிறப்பு ரயிலில் நேற்று (11) அதிகமான உள்ளூர் பயணிகள் பயணித்தனர்.

எனினும், கொழும்பு கோட்டையை அடுத்து, குறித்த ரயில் தரித்து நிற்கும் எந்த ரயில் நிலையத்திலும், இந்த ரயிலில் பயணிக்க பயணச்சீட்டுக்கள் இல்லை என ஹட்டன் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ரயிலில் பயணம் செய்ய இருக்கைகளை இணையம் மூலம் முன்பதிவு செய்து கொள்ளலாம். எனினும், குறித்த ஒடிசி ரயிலில் பயணம் செய்ய டிக்கெட்களை பெற 14 நாள்கள் காத்திருப்பதாக பயணி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, ரயிலில் பயணிப்பதற்கான பயணச்சீட்டுகளை வழங்குவதில் மேலும் முறையான வேலைத்திட்டத்தை முன்னெடுக்குமாறு ரயில்வே திணைக்களம் கோரியுள்ளது.

வார இறுதி விடுமுறை நாள்களைத் தவிர, வியாழக்கிழமையும் இந்தச் சேவையை நடத்த ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன.




## மரக்குற்றிகளுடன் இருவர் கைது

■ சுதத் எச். எம். ஹேவா

அனுமதிப்பத்திரம் இன்றி மரக்குற்றிகளை லொறியில் ஏற்றிச் சென்ற இருவரை ஹட்டன் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

ஹட்டன்- கொழும்பு பிரதான வீதியின் ஹட்டன் செனன் பகுதியில் இந்த மரக்குற்றிகளை ஏற்றிச் சென்ற லொறியை சோதனையிட்ட போது, அனுமதிப்பத்திரம் இன்றி மரக்குற்றிகளை ஏற்றிச் சென்ற சாரதி மற்றும் உதவியாளர் ஆகியோர் கைது செய்யப்பட்டதாக ஹட்டன் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவர் உட்பட லொறியையும் ஹட்டன் மாவட்ட மற்றும் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமென அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## கண்காட்சியை நடத்த முன்னேற்பாடு

■ மெய்யன்

நீண்ட நாள்களின் பின்னர் பாடசாலை நடவடிக்கைகள் சுமூக நிலைமைக்குத் திரும்பிக் கொண்டிருப்பதால் மாணவர்களின் திறன்களுக்கு அமைவாக கற்றல் வாய்ப்புகளை மேம்படுத்துவதற்காக கண்காட்சியை வத்தேகம, பன்விலவில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

பன்விலை கோட்டக் கல்விப் பணிமனை, பொலிஸ் நிலையம், பிரதேச செயலகம், பிரதேச சபை என்பன இணைந்தே இதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்துள்ளன.

கண்டி வள்ளுவர் சங்கத்தின் அனுசரணையில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் நலன் கருதியுமே இந்த ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பில், அதிபர், ஆசிரியர்கள், கல்வி அதிகாரிகளுடனான சந்திப்பு வெள்ளிக்கிழமை பன்விலை கோட்டக் கல்விப் பணிமனையில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சரத் வீரசிங்க தலைமையில் நடைபெற்றது.



# கோணேஸ்வரர் கோவில் காணியை சூட்சுமமாக ஆக்கிரமிக்க முயற்சி

எவ்வாறான பிரச்சினைகள் இருந்தாலென்ன, தங்களுடைய தேவைகளை எவ்வகையிலாவது நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்பதிலேயே பலரும் குறியாக இருக்கிறார்கள். அதுதான், 'பிரச்சினைக்குள் குளிர்காய்ந்து' கொள்ளுதல் என்பர்.

பௌத்த-சிங்கள ஆதிக்கத்தைக் கொண்டிருப்போரில் பலரின் எண்ணங்களும் சிந்தனைகளும் இதே பாதையில் இன்னும் பயணிக்கிறது என்பதை கூறிக்கொண்டு, இதையிட்டு வெட்கித் தலைகுனியவும் வேண்டும். ஏனெனில், பௌத்தர்களில் எத்தனை பேர், உண்மையாகவே புத்தரின் தர்ம போதனைகளைக் கடைப்பிடிக்கின்றனர் என்றால், பலரும் வெறும் பெயருக்காக கூவித்திரிகின்றனர் எனலாம்.

சிறுபான்மையினர் வாழும் இடங்களில் பெரும்பான்மையினர், அடாத்தாக காணிகளை அபகரித்து, அங்கெல்லாம் சந்திக்குச் சந்தி புத்தர் சிலைகளை வைத்தல், மலையகப் பிரதேசங்களில் பிரமாண்டமான புத்தர் சிலைகளை நிறுவுதல், ஏனைய மத வழிபாட்டு இடங்களை ஒட்டியவாறே விஹாரைகளை அமைத்தல் இவையெல்லாம் ஒன்றும் புதிதல்ல.

பௌர்ணமி நாள்களில், நாட்டிலுள்ள மதுபானசாலைகள், இறைச்சிக் கடைகள் மூடப்பட்டிருக்கும். என்றாலும், மாமிசத்தை முதல்நாளன்றே கொள்வனவு செய்து வீடுகளில் சமைத்து உண்ணுதல், கள்ளச் சாராயத்தை காய்ச்சி பருகுதல், இவையெல்லாம், ஆங்காங்கே இடம்பெறுகின்றன.

ஆங்காங்கே புத்தர் சிலைகளை நிறுவுவதன் ஊடாக பெரும்பாமையை நிரூபிக்க முயற்சிக்கலாம். எனினும், புத்தரின் போதனைகள், தர்மங்கள், சிந்தனைகளில் இருந்து தூர விலகிச் சென்று கொண்டிருக்கும் போது, சிலைகள் வெறும் காட்சிப் பொருளாகவும், ஏனைய மதங்களைச் சேர்ந்தவர்களை நிந்திக்கும் செயற்பாடுகளாகவே அமையும்.

இந்நிலையில், ஈழத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க திருகோணேஸ்வரர் கோவிலுக்குச் சொந்தமான 18 ஏக்கர் காணியை, உல்லாசத்துறை அபிவிருத்தியின் பெயரால் ஆக்கிரமிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அறியமுடிகிறது.

சிறுபான்மையினரின் இடங்கள், வணக்க ஸ்தலங்கள், அவற்றின் காணிகளை அபகரிக்க வேண்டுமாயின் இன்றேல், பௌத்த விஹாரையை நிறுவவேண்டுமாயின், வழமைபோன்று தொல்பொருள் திணைக்களமே முன்னின்று காய்களை நகர்த்தி, முதலில் தொல்பொருள் இடமாக அடையாளமிடும். கோணேஸ்வரர் கோவில் விவகாரத்திலும் இதுவே இடம்பெறுகின்றது.

நாடு முகங்கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடியில் இருந்து ஓரளவுக்கேனும், மீண்டெழ வேண்டுமாயின் சுற்றுலாத் துறையைக் கட்டியெழுப்ப முன்னுரிமை கொடுக்கப்படவேண்டும். எனினும், தமிழர்களின் தொன்மை நிறைந்த சிறப்புமிக்க இடங்களையும் தலங்களையும் அடாத்தாக பிடிக்கும் முயற்சிகளுக்கு இடமளிக்கமுடியாது.

கோணேஸ்வரர் கோவிலுக்குச் சொந்தமான 18 ஏக்கர் காணியும், உல்லாசத்துறையை அபிவிருத்தி செய்தல் என்னும் பெயரால் ஆக்கிரமிக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்வாறாக கைப்பற்றப்படும் இடங்களில், புத்தர் சிலைகளை நிறுவி, அங்கு ஏனைய மதங்களை இரண்டாம், மூன்றாம் நிலைகளுக்குத் தள்ளிவிட்டிருக்கும் சம்பவங்கள் ஏராளம். இறுதியில், நீதிமன்றங்களுக்குச் சென்று, நீதிக்காக ஏங்கிக்கிடக்க வேண்டும். அதற்கிடையில், அவ்விடமே முழு பௌத்த மயமாக்கப்பட்டுவிடும். ஆகையால் ஆக்கிரமிக்கும் முயற்சியை கைவிடுவதே உசிதமானது.




## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




என்.கே.அஷோக்பரன்
Twitter: @nkashokbharan

# மோசமானவர்கள் எனக் கருதப்படுபவர்களுக்கு மக்கள் வாக்களிப்பது ஏன்?

கடந்த பொதுத் தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில் இரண்டாவது அதிகப்படியாக 316,544 விருப்பு வாக்குகள் பெற்று பாராளுமன்ற உறுப்பினராகியவர் பிரசன்ன ரணதுங்க. 'நல்லாட்சி அரசாங்கம்' அமைந்த 2015 பொதுத் தேர்தலில் கூட, கம்பஹா மாவட்டத்தில் அதிகப்படியான விருப்பு வாக்குகளாக 384,448 வாக்குகளைப் பெற்றுக்கொண்டிருந்தவர் பிரசன்ன ரணதுங்க. அன்று கம்பஹா மாவட்டத்தில் ஆளும் கட்சியாக அமைந்த ஐக்கிய தேசிய கட்சி பட்டியலில் முதலிடம் பிடித்த ரஞ்சன் ராமநாயக்க பெற்றுக்கொண்ட விருப்பு வாக்குகள் 216,463 தான்!

இந்தப் பிரசன்ன ரணதுங்க, மேல்மாகாண முதலமைச்சராக இருந்தபோது, வணிகர் ஒருவரை மிரட்டிப் பணம் பறிக்க முயன்ற குற்றச்சாட்டில், கொழும்பு மேல் நீதிமன்றத்தால் குற்றவாளியாகக் காணப்பட்டு, ஐந்து வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட சிறைத்தண்டனையும், 25 மில்லியன் ரூபாய் தண்டப்பணமும் தண்டனையாக விதிப்பட்டுள்ள ஒரு குற்றவாளி. குறித்த தீர்ப்புக்கெதிராக மேன்முறையீடு செய்துவிட்டு தனது அரசியல் பயணத்தைத் தடையின்றித் தொடர்கிறார்.

பிரசன்ன ரணதுங்கவுக்கு எதிராகச் சொல்லப்படும் ஒரே குற்றச்சாட்டு இதுவல்ல. இவ்வருட ஆரம்பத்தில், அவுஸ்திரேலியாவில் வசிக்கும் இலங்கையரான அனுஷ்கா ரஞ்சீவி டி சில்வா என்பவர், ஓர் ஊடக சந்திப்பை நடத்தி பிரசன்ன ரணதுங்க, தலவத்துகொடையில் உள்ள அரசுக்கு சொந்தமான காணியை அண்மித்துள்ள இரண்டு காணிகளை பலவந்தமாக சுவீகரிக்க முற்பட்டுள்ளார் என்று பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இதையெல்லாம் தாண்டி பிரசன்ன ரணதுங்க தேர்தல்களில், இலங்கையின் சனத்தொகை அதிகமான மாவட்டங்களில் ஒன்றாக கம்பஹா மாவட்டத்தில், அதிகப்படியாக விருப்பு வாக்குகளைப் பெற்று வெல்கிறார்.

பலமுறை அடிதடி அடாவடிக் குற்றச்சாட்டுக்களில் கைதாகியவர் இன்றைய இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த. இவரும் இவரது தம்பியாரும் செய்து வரும் அடாவடித்தனங்கள் மிகப் பிரபல்யமானவை. இவருக்கும், இவரது தம்பிக்கும் எதிராக சுற்றுச்சூழலை அழித்தமை தொடர்பான குற்றச்சாட்டுகளும் முன்வைக்கட்டுள்ளன. இன்று (12) நீதிமன்ற அவமதிப்பு தொடர்பில் இவருக்கெதிராக வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.

ஆனால்? இந்த சனத் நிஷாந்த தான் 2015 மற்றும் 2020இல் நடந்த இரண்டு பொதுத் தேர்தல்களிலும் புத்தளம் மாவட்டத்திலேயே அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றுக்கொண்டார்.

பிள்ளையான் என்றறியப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன், ஜோசப் பரராஜசிங்கம் கொலைக் குற்றச்சாட்டின் பேரில் விளக்கமறியலில் இருந்துகொண்டே கடந்த பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே அதிக விருப்பு வாக்குளைப் பெற்று வெற்றியீட்டியிருந்தார். பின்னர் 2021இல் குறித்த குற்றச்சாட்டிலிருந்து நீதிமன்றத்தால் அவர் விடுதலை செய்யப்பட்டிருந்தார். ஆயினும் சிவில் சமூகம் பிள்ளையான் மீது கடுமையான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகிறது. ஆனால், அப்படியான சூழலிலும், அவர் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே அதிக வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டியிருக்கிறார்.

எத்தனையோ வழக்குகள், குற்றச்சாட்டுகள் ரிஷாட் பதியுதீனுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக காடழிப்பு தொடர்பில், மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் மீண்டும் தனது சொந்தச் செலவில் மரம் நாட்டவேண்டும் என்ற தீர்ப்பும் அளிக்கப்பட்டிருந்தது. இத்தனையையும் தாண்டி கடந்த பொதுத் தேர்தலில் ரிஷாட் பதியுதீன் வன்னி மாவட்டத்தில் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார்.

பொதுத் தேர்தலுக்கு முன்பதாக ஜூலை 31, 2020இல் இரத்னபுரி மேல் நீதிமன்றத்தால் கொலைக்குற்றவாளியாகக் காணப்பட்டு, மரணதண்டனை விதிக்கப்பட்ட பிரேமலால் ஜயசேகர, 2020 ஒகஸ்ட் மாதம் இடம்பெற்ற பொதுத் தேர்தலில், இரத்னபுரி மாவட்டத்தில் இரண்டாவது அதிகபட்ச விருப்பு வாக்குகளாக 104,237 வாக்குகள் பெற்று வெற்றியீட்டியிருந்தார். ஆயினும் இவர் 2021இல் மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் மேன்முறையீட்டில் கொலைக்குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டது. ஆனால் மக்கள் வாக்களித்தபோது, அவர் கொலைக்குற்றத்திற்காக மரணதண்டனை விதிக்கப்பட்டவராக இருந்தார்.

டக்ளஸ் தேவானந்தா, இந்தியாவில் தேடப்படும் ஒரு குற்றவாளி. டக்ளஸ் தலைமையிலான துணை இராணுவக் குழு மீது படுகொலை, ஆட்கடத்தல் உள்ளிட்ட பல குற்றச்சாட்டுகளை பல தரப்பினரும் முன்வைத்து வருகிறார்கள். ஆயினும் கூட, கடந்த பொதுத் தேர்தலில், யாழ். மாவட்டத்தில், தமிழரசுக் கட்சியின் ம.ஆ சுமந்திரன், அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் சீ.வீ விக்னேஸ்வரன் ஆகியோரைவிட அதிக விருப்பு வாக்குளை டக்ளஸ் தேவானந்தா பெற்றிருந்தார்.

மேற் சொன்ன எல்லாவற்றிலும் ஒரு விடயம் துலங்கி நிற்பதை நாம் அவதானிக்கலாம். மேற்சொன்ன அனைவரதும் வரலாறும் நடத்தையும் இயல்பும் என எல்லாவற்றையும் அறிந்தும், அந்த மக்கள் மேற்சொன்னவர்களை தமது பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். மேற்சொன்ன எவரும் போட்டியிட்ட முதல் தேர்தல் கடந்த பொதுத் தேர்தல் அல்ல. அதற்கு முன்னர் மக்களை அவர்களை அறியாதவர்களாக இருந்தவர்களும் அல்ல. ஆனால் அம்மக்கள் குறித்த நபர்களை, அவர்கள் பற்றிய விமர்சனங்கள், குற்றச்சாட்டுகள், அவர்களது நடத்தைகளைத் தாண்டி, ஏகபோகமாக வாக்களித்து, தமது பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்றால், அது குறித்தவர்களைத் தேர்தலில் போட்டியிட அனுமதித்த சட்டத்தின் குற்றமா, அவர்களுக்கு தேர்தல் பட்டியலில் இடமளித்த கட்சியின் குற்றமா? யார் குற்றம்?

குறித்த நபர்கள் மீது கடுமையான விமர்சனத்தை, படித்த, தம்மை அறிவு வாய்ந்த சிவில் சமூகமாக முன்னிறுத்தும் கூட்டமொன்று தொடர்ந்தும் முன்வைத்து வருகிறது. குறித்த நபர்கள் தெரிவுசெய்யப்படுவது ஜனநாயக விரோதமானது என்றுகூட சிலர் கருத்துரைக்கிறார்கள். குறித்த நபர்களுக்கு அமைச்சுப் பதவிகள் தரப்படக்கூடாது என்றுகூட சிலர் வாதிடுகிறார்கள்.

ஆனால், இந்த 'சிவில் சமூகம்' என்றும், தாம் 'மக்களின் குரல்' என்று தம்மை முன்னிறுத்தும் இவர்கள் மறந்துவிடுகிற ஒரு விடயம், இதே மக்கள்தான் மேற்சொன்னவர்களுக்கு விருப்பு வாக்களித்து மேற்சொன்னவர்களை தமது பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுத்துள்ளார்கள். மேற்சொன்னவர்கள் படித்த, தம்மை அறிவுவாய்ந்த சிவில் சமூக முன்னிறுத்தும் கூட்டத்தின் பிரதிநிதியாக இல்லாமல் இருக்கலாம். ஆனால், அவர்கள் பிரதிநிதித்துவம் செய்யும் மாவட்ட மக்கள், அவர்களை தமது பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுத்துள்ளனர் என்பதுதான் நாம் ஏற்க விரும்பாவிட்டாலும் முகத்திலறையும் உண்மையாக இருக்கிறது.

இவர்கள் தேர்ந்தெடுக்கப்படக் கூடாது என்று கர்ஜிப்பதை விட, குறித்த மக்கள் இவர்களுக்கு ஏன் வாக்களிக்கிறார்கள் என்று ஆராய்ந்தால், சிலவேளைகளில் இதுபற்றிய மேலதிகப் புரிதல் ஏற்படும்.

ஆனால், இது முறையான வழியில் செய்யப்பட வேண்டியதொரு ஆராய்ச்சியாகும். இங்கு 'சிவில் சமூகமாக' தம்மை முன்னிறுத்துகிறவர்களுக்கும், உண்மையான மக்களுக்கும் இடையில் கணிசமான இடைவெளி காணப்படுவது பல சந்தர்ப்பங்களில் உணரப்படுகிற ஒன்று.

இது, 'சிவில் சமூகமாக' தம்மை முன்னிறுத்துவோர் உண்மையின் மக்களின் குரலாக இருக்கிறார்களா என்ற கேள்வியை நிச்சயமாக எழுப்பவே செய்கிறது.

பிரதிநிதித்துவ ஜனநாயகக் கட்டமைப்பு ஒன்றில், மாற்றம் என்ற ஒன்று வரவேண்டுமானால், அது கட்சிகளில், அரசியல்வாதிகளில் இருந்து வருவது என்பது சாத்தியக்குறைவானது. மாற்றம் என்பது மக்களிலிருந்து வரவேண்டும்.

அதேவேளை, தன்னைத்தானே 'சிவில் சமூகமாக" முன்னிறுத்தும் கூட்டமொன்று விரும்புகிறவர்கள்தான் பொருத்தமானவர்கள், ஏனையோர் பொருத்தமற்றவர்கள் என்ற சிந்தனையும் ஒருவகையில் பார்த்தால் ஜனநாயக முரணானதுதான். அது, 'உயர் குழாம் ஆட்சியின்' பாற்பட்ட சிந்தனையே அன்றி, பிரதிநிதித்துவ ஜனநாயகத்திற்கு விரோதமானது.

மறுபுறத்தில், குற்றவாளிகள், ஊழல் பேர்வழிகள் ஒரு குறிப்பிட்ட மக்கள் குழு மீது சலுகை, இன, மத, அல்லது சாதி அடையாளம், தமக்கான நன்மைகள், அல்லது பயம் போன்றவற்றின் காரணத்தால் பெற்றுக்கொண்டுள்ள செல்வாக்கால் வாக்குகளைப் பெற்று வெற்றி பெறுவது ஜனநாயகமா என்ற கேள்வியிலும் நியாயம் இல்லாமல் இல்லை.

ஜனநாயகம் என்பது முழுத்திருப்திகரமானதோர் ஆட்சிமுறையல்ல; மாறாக, அது உள்ளவற்றில் சிறந்தது என்பதுதான் உண்மை.

குற்றவாளிகள், ஊழல்வாதிகள், நேர்மையற்றவர்கள் அரசியலுக்கு வரக்கூடாதென்றால், அதனைச் செய்வதற்கான பலம் மக்களிடம்தான் இருக்கிறது.

மக்கள் நினைத்தால், ஒரே தேர்தலில் அதனைச் செய்துவிடலாம். மக்கள் அதனைச் செய்யாவிட்டால், அதுதான் மக்கள் விருப்பம் என்று எடுத்துக்கொள்ள வேண்டியதுதான்.



## வாழ்வியல் தரிசனம்

மக்களில் பலருக்கு சுதந்திரம் என்பது எது, சுதந்திரம் இன்மை என்பது எது எனத் தெரியாமலேயே வாழ்கின்றார்கள். இருக்க வீடு, கொஞ்சம் பணம், சாப்பிட உணவு எனுமாறு வசதிகள் பெரிதும் இல்லாதவர்கள், எவ்வித சிந்தனையும் இன்றி இருக்கிறார்கள். வசதி படைத்தோர் எதுபற்றியும் கவலைப்படுவதில்லை.

எந்த அரசாங்கம் வந்து போனாலும், அவை என்ன செய்தார்கள் என்பதும் புரிவதில்லை. எல்லா ஆளும் கட்சிகளும் சொன்னவற்றைச் செய்வதில்லை.

இவ்விடயத்தில், பெரும்பான்மை, சிறுபான்மை என்கிற பேதம் கிடையாது. முன்னேறியுள்ள நாடுகள் போல, ஏன் எங்களால் மாறமுடியவில்லை எனக் கேள்வி கேட்பதுமில்லை.

எமது நாடு சகல வளங்களும் கொண்டது. ஆனால், ஏன் பொருளாதார சுபீட்சம் காண முடியாமல் இருக்கின்றது? மேலை நாடுகள், அபிவிருத்தியடைந்த நாடுகளில், பெரும்பான்மை சிறுபான்மை என எல்லோருக்கும் உரிமைகள் ஒன்றுதான்; பேதங்கள் இல்லை. ஆனால் எமது நாட்டில், இனம், மதம், மொழி பேதங்கள் காண்பதால் முன்னேற முடியாமல் தவிக்கின்றது. யுத்தம், போராட்டம், வேலைநிறுத்தம், கடன்பெறுதல் இருந்தால் எப்படி நாடு செழிக்கும்? சிந்திக்க செயல்பிறக்கும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### கவனம் செலுத்தவும்

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் இயங்கி வந்த மார்பக சிகிச்சை நிலையத்தின் செயற்பாடுகளுக்கு மாவட்ட பொது வைத்தியசாலை நிர்வாகத்தால் இடையூறு ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் வைத்திய சிகிச்சைப்பிரிவு உபகரணங்களை ஏற்றிய லொறியும் வைத்தியசாலை நிர்வாகத்தால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கீழ் தற்காலிகமாக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் இயங்கி வந்த மார்பக சிகிச்சை பிரிவில் ஏற்பட்ட தீ விபத்தால் எரிந்து முற்றாக நாசமாகியுள்ளது

குறித்த சிகிச்சை நிலையம் பெரும் நெருக்கடிகளுக்கு மத்தியில் மீளவும் தற்காலிக இடமொன்றில் இயங்கி வந்துள்ளது. இதன் நிர்வாகச் செயற்பாடுகள் அனைத்தையும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினாலே நிர்வாகிக்கப்பட்டு வந்துள்ளது.

குறித்த சிகிச்சை பிரிவினை கிருஷ்ணபுரத்தில் அமைந்துள்ள தொற்று நோயியல் சிகிச்சை வளாகத்துக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. எனினும், தற்காலிகமாக இயங்கிய கிளிநொச்சி வைத்தியசாலை வளாகத்தில் இருந்து அதற்கான உபகரணங்கள் மற்றும் பொருட்களை ஏற்றிச் சென்ற லொறி வைத்தியசாலை நிர்வாகத்தால் தடுத்து நிறுத்தப்பட்டு உள்ளதுடன் இடையூறுகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

யது பாஸ்கரன்



# ODEL Mall Kandy ஆரம்பம்

சொஃப்ட்லொஜிக் ஹோல்டிங்ஸ் பிஎல்சி தனது 'ODEL Mall Kandy ஐ திறந்துள்ளது. விசாலமான 91,414 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட ODEL Mall, இலங்கை மலைநாட்டின் தலைநகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள கண்டியின் மிகவும் விரும்பப்படும் அதிநவீன, உயர்தர வாழ்க்கை முறை ஷொப்பிங் இடமாக மாறவுள்ளது.

இலக்கம் 377, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, பேராதனை வீதி, கண்டி என்ற முகவரியில் அமைந்துள்ள இந்த ODEL Mall, சொஃப்ட்லொஜிக் இன் மிகவும் பிரபலமான வர்த்தக நாமங்களான ODEL (உலகப் புகழ்பெற்ற சர்வதேச மற்றும் உள்ளூர் இலச்சினைகளின் தயாரிப்பு வரிசையைக் கொண்டுள்ள இலங்கையின் முதன்மையான நவநாகரிகம் மற்றும் வாழ்க்கை முறை சில்லறை விற்பனையாளர்) அடங்கலாக மிகவும் போற்றப்படுகின்ற வர்த்தக நாமங்களைக் கொண்டிருக்கும். அத்துடன், Baskin Robbins (உலகில் 50 க்கும் மேற்பட்ட நாடுகளில் இயங்கும் உலகின் மிகப்பெரிய விசேடமான ஐஸ்கிரீம் சங்கிலி), GLOMARK (நாட்டின் நவீன சில்லறை வர்த்தகத் துறையில் புரட்சியை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட இலங்கையின் முதல் உத்வேகமளிக்கும் உலகளாவிய சந்தை) மற்றும் POPEYES (அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட முன்னணி துரித உணவுச் சங்கிலி) ஆகியனவும் இங்கு தமது சேவைகளை வழங்கவுள்ளன.

இந்தச் சில்லறை வணிக வளாகமானது, கண்டியில் முதன்முறையாக, GLOMARK மற்றும் POPEYES என வேகமாகப் பிரபலமடைந்து வருகின்ற இரண்டு வர்த்தக நாமங்களை அறிமுகப்படுத்தவுள்ளது. GLOMARK பல்பொருள் அங்காடியானது உங்கள் வீட்டிற்குத் தேவையான உள்நாட்டிலும் உலகளாவிய ரீதியிலும் பெறப்படுகின்ற பரந்த அளவிலான அத்தியாவசியப் பொருட்களையும் வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்தும் வகையில் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட தனித்துவமான ஷொப்பிங் அனுபவத்தையும் கொண்டிருக்கும்.

இந்தப் பல்பொருள் அங்காடி அதன் தனித்துவமான வாடிக்கையாளர் அனுபவத்தின் நீட்டிக்கப்பட்ட வடிவமாக Bakes உடன் ஒரு கஃபே அனுபவத்தையும் வழங்குகிறது. POPEYES அன் தனித்துவமான, மென் சமையல் முறை கலைக்காக பெயர்பெற்று விளங்குகின்றது. அங்கு புத்தம்புதிய, உள்நாட்டில் பெறப்பட்ட கோழி இறைச்சியானது அதன் தனியுரிமம் கொண்ட சுவையூட்டிகள் மற்றும் மசாலாப் பொருட்களின் கலவையுடன் 12 மணி நேரம் ஊற வைக்கப்படுகிறது. அதன் பிறகு கையால் அடித்து, பிரட் செய்து, ஒரு வெளியே ஒரு மொருமொருப்பான மேலோட்டத்தைத் தக்க வைத்துக் கொண்டு உள்ளே சாறு வடிவம் கொண்டதாக இருக்கும். அமெரிக்காவின் லூசியானாவில் தனது ஆணிவேர்களைக் கொண்டுள்ள இது, வாடிக்கையாளர்களின் சுவை மொட்டுகளை முழுமையாக நலச்செழுமை பெறச் செய்கின்றது.

இந்த அறிவிப்பு குறித்து கருத்து தெரிவித்த சொஃப்ட்லொஜிக் ஹோல்டிங்ஸ் பிஎல்சி இன் பணிப்பாளர் சபைத் தலைவரான அசோக் பத்திரகே குறிப்பிடுகையில், "ODEL Mall Kandy ஐ ஆரம்பித்து வைப்பதை அறிவிப்பதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். இதன் மூலம் கண்டி மக்களுக்கு எங்களின் மிகவும் அபிமானம் பெற்ற வர்த்தக நாமங்கள் பலவற்றை ஒன்றிணைத்து ஒரு ஈடுஇணையற்ற ஷொப்பிங், உணவு விருந்து அனுபவத்தை நாங்கள் கொண்டு வருகிறோம். இந்தச் சிறந்த புதிய அமைவிடத்தின் சிறப்பான அனுகூலம் எமக்கு மிகவும் ஊக்கமளிப்பதுடன், இது எங்கள் வாடிக்கையாளர்களுக்கு சௌகரியத்தைக் கொண்டு வரும் என்று நாங்கள் நம்புகிறோம்" என்று குறிப்பிட்டார்.



SLT-MOBITEL அறிமுகம்:

# The Arena

SLT-MOBITEL தனது புதிய அனுபவ நிலையமான 'The Arena' வை கொழும்பில் நிறுவியுள்ளது. அடுத்த தலைமுறை புத்தாக்கமான வாடிக்கையாளர் மையப்படுத்திய தீர்வுகள், சேவைகளைக் கொண்டுள்ள இந்த நிலையத்தினூடாக, புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, தமது வாழ்க்கைமுறை அனுபவங்களை மாற்றியமைத்துக் கொள்வது எவ்வாறு என்பது பற்றிய விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

இந்த Arena, கொழும்பு 7 இலிலுள்ள பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் நிறுவப்பட்டுள்ளது.

இந்த அறிமுக நிகழ்வில் குழும தவிசாளர் ரொஹான் பெர்னாண்டோ, குழும பிரதம நிறைவேற்று அதிகாரி லலித் செனெவிரட்ன, SLT பிரதம நிறைவேற்று அதிகாரி ஜனக அபேசிங்க, மொபிடெல் பிரதம நிறைவேற்று அதிகாரி சந்திக விதாரென, SLT-MOBITEL இன் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

ரொஹான் பெர்னாண்டோ கருத்துத் தெரிவிக்கையில், "இன்றைய டிஜிட்டல் உலகில், இல்லங்கள் மற்றும் வியாபாரச் சூழலில் புத்தாக்கமான தீர்வுகள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பதை வெளிப்படுத்துவது மிகவும் முக்கியமானதாகும். SLT-MOBITEL இன் Arena அறிமுகத்துடன், எமது வாடிக்கையாளர்கள் மற்றும் வியாபாரங்களுக்கு, அவர்களின் வாழ்க்கை முறையில் டிஜிட்டல் தொழில்நுட்பத்திலமைந்த சேவைகள் மற்றும் தீர்வுகள் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதைப் பற்றி அறிந்து கொள்ள முடியும். மதிநுட்பமான புத்தாக்கங்களும் தொழில்நுட்பமும் சங்கமிக்கும் இந்த அனுபவ நிலையமானது, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் தொலைத்தொடர்பாடல் தொழிற்றுறையின் அடையாளமாக அமைந்திருக்கும்" என்றார்.

SLT-MOBITEL மற்றும் முன்னணி கண்காட்சி நிலையமான பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம் ஆகியன இணைந்து, வாடிக்கையாளர்களுக்கு அடுத்த தலைமுறை தொழில்நுட்பங்களை அனுபவிப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தியுள்ளன. Arena வில் டிஜிட்டல் வாழ்க்கை முறைகளுக்கு அவசியமான பிரத்தியேகமான உள்ளம்சங்கள், வியாபாரங்கள் மற்றும் சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சிகள் மற்றும் eSports வலயப் பகுதி போன்றன அடங்கியுள்ளன. சமூகத்துக்கு இந்தப் புதிய தொழில்நுட்பங்கள் எவ்வாறு உதவியாக அமைந்திருக்கும் என்பது தொடர்பான விளக்கங்களை வழங்கும் பகுதியாக இது அமைந்துள்ளது.

டிஜிட்டல் வாழ்க்கைமுறை arena வில், Smart Home அம்சங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும். இதனூடாக 5G பரீட்சார்த்த அனுபவங்கள் மற்றும் ஸ்மார்ட் கட்ஜெட்கள் போன்றன வழங்கப்படும்.

வியாபாரங்கள் மற்றும் சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்கு வரையறைகளற்ற வாய்ப்புகளை வழங்கும் இந்த Arena வில், டிஜிட்டல் சேவைகள், வலையமைப்பு தீர்வுகள், இணையத் தீர்வுகள், டேட்டா நிலைய தீர்வுகள், சைபர் பாதுகாப்பு தீர்வுகள், தகவல் பரிமாற்ற தீர்வுகள், களியாட்ட மற்றும் IOT தீர்வுகள், NFC தீர்வுகள், மென்பொருள் விருத்தி மற்றும் டிஜிட்டல் சந்தைப்படுத்தல் தீர்வுகள் போன்றன வழங்கப்படும். இந்த நிலையம், நேரலை ஸ்ட்ரீமிங் நிலையமாகவும் செயலாற்றும்.

eSports வலயத்தினூடாக புத்தாக்கமான கணினி மற்றும் கொன்சோல் கேமிங் வசதிகள், போட்டித் தொடர்கள், eSport கட்டமைப்பு மற்றும் டேட்டா சேவைகள் போன்றன அதிவேக இணைய இணைப்பு வசதிகளுடன் வழங்கப்படுகின்றன.

சென்னை

# லைட்டர் இறக்குமதிக்கு தடை விதிக்க வேண்டும்



தமிழ்நாட்டில் தீப்பெட்டி உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ளோரின் வாழ்வாதார அழிக்கப்படுவதை தடுக்கும் வகையில் பிளாஸ்டிக் லைட்டர் இறக்குமதிக்கு தடை விதிக்க வேண்டும் என்று மத்திய வர்த்தக மற்றும் தொழில் துறை அமைச்சர் பியூஷ் கோயல்க்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இத்தொழிலில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் நேரடியாக வேலைவாய்ப்பைப் பெறுகின்றனர் என்றும், அப்பணியாளர்களில் பெரும்பாலானோர் பெண்கள் ஆவர் என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், சீனா போன்ற நாடுகளில் இருந்து சட்டப்படியாகவும் சட்டவிரோதமாகவும் இறக்குமதி செய்யப்படும் ஒரு முறை மட்டுமே பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் லைட்டர்களின் வரவால் தீப்பெட்டித் தொழிலின் உள்நாட்டு சந்தை வாய்ப்பு வேகமாக குறைந்து வருவதை தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளாகினர்.

இந்த லைட்டர்கள் ரூ.10க்கு கிடைப்பது 20 தீப்பெட்டிகளுக்கு மாற்றாக இருக்கும். இருப்பினும், அவை சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் பிளாஸ்டிக்கால் தயாரிக்கப்படுவதுடன், அதில் பயன்படுத்தும் எரிபொருளின் சுகாதார தாக்கம் இன்னும் அறியப்படவில்லை என்றும், இவ்வெளிநாட்டு லைட்டர்கள் தொடர்ந்து சந்தையைக் கைப்பற்றினால், தீப்பெட்டி உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள தமிழ்நாட்டிலுள்ள ஒரு லட்சத்துக்கும் அதிகமான மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தை இழக்க நேரிடும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சென்னை

# காதலியின் திருமணத்தில் தாலி கட்ட முயன்ற காதலன்

சென்னை, தண்டையார்பேட்டை, கைலாசம் தெருவை சேர்ந்தவர் 25 வயதான இளைஞன் சென்னையில் உள்ள பிரபல நகை கடையில் வேலை செய்து வருகிறார். அதே கடையில் வேலை செய்த 20 வயதான இளம்பெண்ணை காதலித்து வந்தார்.

அந்த பெண்ணுக்கு அவரது பெற்றோர் வேறு ஒரு மாப்பிள்ளை பார்த்து திருமணம் நிச்சயம் செய்தனர். "என்னை காதலித்து ஏமாற்றி விட்டு இப்போது வேறு ஒருவரை திருமணம் செய்து கொள்ளப்போகிறாயா" என தட்டிக்கேட்டார்.

அதற்கு அந்த பெண், "நான் எனது பெற்றோர் பார்த்துள்ள மாப்பிள்ளையைத்தான் திருமணம் செய்து கொள்வேன். உன்னால் முடிந்தால் எங்கள் திருமணத்தை தடுத்துப்பார்" என்று சவால் விட்டதாக தெரிகிறது.

திருமணம் நடக்கவிருந்த வெள்ளிக்கிழமை (09) காலை 6.30 மணியளவில் இவர்களின் மணமக்கள் இருவரும் மணமேடையில் வந்து அமர்ந்தனர். இருவீட்டார் முன்னிலையில் மணப்பெண் கழுத்தில் மணமகன் தாலி கட்ட முயன்றார். அப்போது அங்கு வந்த காதலன் சினிமா பட பாணியில் மணமகன் கையில் இருந்த தாலியை தட்டிப்பறித்து, தனது காதலியின் கழுத்தில் கட்ட முயன்றார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த மணமக்கள் வீட்டார், அந்த இளைஞனை மடக்கிப்பிடித்து மணப்பெண் கழுத்தில் தாலி கட்ட விடாமல் தடுத்தனர். பின்னர் அவரை சரமாரியாக அடித்து உதைத்து அவரிடம் இருந்த தாலியை பறித்தனர். இதனால் திருமண மண்டபத்தில் பரபரப்பு ஏற்பட்டது. பின்னர் அவரை பொலிஸில் ஒப்படைத்தனர்.

மூவரிடமும் பொலிஸார் விசாரணை நடத்தினர், அப்போது மணமகன், அந்தப் பெண்ணை திருமணம் செய்து கொள்ள மறுத்துவிட்டார். திருமண ஏற்பாடுக்கு தாங்கள் செய்த செலவுக்கான பணத்தை மணமகள் வீட்டாரிடம் இருந்து வாங்கி தரும்படி கூறினார். அதற்கு மணப்பெண் வீட்டார் சம்மதம் தெரிவித்தனர்.

அந்தப் பெண்ணை காதலனை திருமணம் செய்து கொள்ளும்படி கேட்டனர். ஆனால் மணப்பெண், காதலன் திருமணம் செய்து கொள்ள மாட்டேன் என மறுத்துவிட்டார்.

திருமண வரவேற்பால் களை கட்டி இருந்த திருமண மண்டபம் திருமணம் நின்று போனதால் களை இழந்து காணப்பட்டது.

ராமேஸ்வரம்



# மீனவர்கள் 2 ஆவது நாளாக வேலைநிறுத்தம்

ராமேஸ்வரத்தில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடி தொழிலை நம்பி உள்ளனர். இந்த நிலையில் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக ராமேஸ்வரம் மீனவர்களை இலங்கை கடற்படையினர் அடிக்கடி சிறைப்பிடித்து செல்வதும், மீன்களை பறித்துக் கொண்டு படகுகளை சேதப்படுத்துவதும் வாடிக்கையாக நடந்து வருகிறது.

மாதம்தோறும் மானிய விலையில் அரசு வழங்கும் 1,800 லீற்றர் டீசல் அளவை அதிகரித்து வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கை கடற்படை 125 விசைப்படகுகளை கைப்பற்றியிருப்பதால் வாழ்வாதாரம் இழந்த ராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்களுக்கு அரசு அறிவித்த தலா ரூ.5 இலட்சம் வழங்க வேண்டும். மேலும் பாதிக்கப்பட்ட 30 விசைப்படகு உரிமையாளர்களுக்கு நிவாரண தொகை வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

அந்த வேலை நிறுத்தப் போராட்டம் நேற்று (11) இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது.

இதன் காரணமாக 600க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் மீன் பிடிக்க செல்லவில்லை. இதனால் முதலாவது நாள் மட்டும் மீனவர்களுக்கு ரூ.1 கோடி வரை வருமான இழப்பு ஏற்பட்டது. நாளை (13) ஆம் திகதி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்றும் ராமேஸ்வரம் மீனவர்கள் அறிவித்துள்ளனர்.

சென்னை



# சாவி விவகாரம் இன்று விசாரணை

அண்ணா திராவிட முன்னேற்ற கழக (அ.தி.மு.க) அலுவலகத்தில் ஜூலை 11 ஆம் திகதி, எடப்பாடி பழனிசாமி மற்றும் ஓ.பன்னீர்செல்வம் ஆதரவாளர்களுக்கு இடையே ஏற்பட்ட மோதல் கலவரமாக மாறியது.

இதில் பலர் காயம் அடைந்த நிலையில் அ.தி.மு.க. அலுவலகமும் அடித்து நொறுக்கி சூறையாடப்பட்டது. அங்கிருந்த பொருட்களும் கொள்ளை போனது. இதைத் தொடர்ந்து அ.தி.மு.க. அலுவலகம் பூட்டி சீல் வைக்கப்பட்டது.

இதனை எதிர்த்து எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வம் இருவருமே சென்னை உச்ச நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தனர். விசாரணை நடத்திய நீதிபதி சதீஷ்குமார், அலுவலக சாவியை எடப்பாடி பழனிசாமியிடம் ஒப்படைக்க உத்தரவிட்டார்.

இந்த வழக்கு விசாரணை உச்ச நீதிமன்றத்தில் மீண்டும் இன்று (12) விசாரணைக்கு வருகிறது.

திருப்பதி

# திருப்பதி லட்டில் சர்க்கரையை குறையுங்கள்

திருப்பதி கோயிலுக்கு நிகராக அங்கு வழங்கப்படும் லட்டு பிரசாதமும் பிரசித்த பெற்றது. இலட்சக்கணக்கான பக்தர்கள் திருப்பதி வந்து ஏழுமலையானை தரிசனம் செய்வதுடன், வருகை தரும் அனைவரும் தவறாமல் லட்டு பிரசாதத்தை வாங்கி செல்லாமல் இருப்பதில்லை.

இந்நிலையில், பக்தர் ஒருவர் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளார். லட்டு பிரசாதத்தில் மட்டும் இனிப்பு சற்று அதிகமாக உள்ளதால், எங்களை போன்ற சர்க்கரை நோயாளிகள் அதை உண்ண முடியவில்லை. எனவே, எங்களை போன்ற சர்க்கரை வியாதி உள்ளவர்களும் லட்டு பிரசாதம் சாப்பிட ஏதுவாக லட்டின் இனிப்பு அளவை வைத்து பிரசாதம் தயாரித்துக் கொடுத்தால் சிறப்பாக இருக்கும் என கோரிக்கை வைத்தார். பக்தரின் கோரிக்கையை கேட்டறிந்த நிர்வாகி, இது தொடர்பாக நிச்சயம் ஆலோசித்து முடிவு எடுப்போம் என உறுதியளிக்கப்பட்டுள்ளது.



ஆசிய வலைப்பந்தாட்ட சம்பியன்ஷிப்:

# சம்பியனான இலங்கை

சிங்கப்பூரில் இடம்பெற்று வந்த ஆசிய வலைப்பந்தாட்ட சம்பியன்ஷிப் தொடரில் இலங்கை சம்பியனாகியுள்ளது.

நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் சிங்கப்பூரை வென்றே இலங்கை இரண்டாவது தடவையாக தொடர்ச்சியாக சம்பியனாகியிருந்தது.

முதலாவது காற்பகுதியில் 13-19 என்ற புள்ளிகள் கணக்கில் பின்தங்கியிருந்த இலங்கை, மீண்டு வந்த மற்ற மூன்று காற்பகுதிகளிலும் முன்னிலை பெற்று இறுதியில் 63 -3 என்ற புள்ளிகள் கணக்கில் வென்றிருந்தது.

இப்போட்டியில் வழமை போன்று தர்ஜினி சிவலிங்கத்துடன், சத்துரங்கி ஜயசூரிய, கயானி திஸாநாயக்க, கயஞ்சலி, அமரவன்ஸ, டுலாங்கி வன்னிதிலகே ஆகியோர் பிரகாசித்திருந்தனர். தர்ஜினி அதிகபட்சமாக 19 புள்ளிகளைப் பெற்றிருந்தார்.

இலங்கை அணிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர். இலங்கைக்கான சீன உயர்ஸ்தானிகரலாயமும் வாழ்த்து தெரிவித்துள்ளது.



மாவட்ட விளையாட்டு விழாவில்

## மெய்வல்லுநர் போட்டியில் சம்பியனான தம்பலகாமம் பிரதேச கழக அணி

ஹஸ்பர்

பிரதேச செயலக கழகங்களுக்கிடையிலான நடாத்தப்பட்டு வந்த மாவட்டவிளையாட்டு விழா நிகழ்வில், மெய்வல்லுநர் போட்டியில் தம்பலகாமம் பிரதேச கழகஅணி சம்பியனாகியது.

கந்தளாய் லீலாரத்ன மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இப்போட்டியில் தம்பலகாமல் பிரதேசக கழக அணியானது 10 தங்கப் பதக்கங்களையும், ஆறு வெள்ளி பதக்கங்களையும், மூன்று வெண்கலப் பதக்கங்கள் என மொத்தமாக 19 பதக்கங்களை தனதாக்கிக் கொண்டனர்.

இதில் மைதான நிகழ்ச்சி நிரல் வீரராகவும், அனைத்து சகல துறை வீரராகவும் ஏ. ஆபித் தெரிவாகினார். தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ. ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கிணங்க விளையாட்டு உத்தியோகத்தர் கே.டி. ஹாரிஸ் குறித்த வீரர்களுக்காக திறம்பட பயிற்சியளித்திருந்தார்.



## வெள்ளையடித்த அவுஸ்திரேலியா

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், முதலிரண்டு போட்டிகளையும் ஏற்கெனவே வென்றிருந்த அவுஸ்திரேலியா, கெய்ன்ஸில் நேற்று நடைபெற்ற மூன்றாவது போட்டியையும் வென்றமையைத் தொடர்ந்தே 3-0 என நியூசிலாந்தை வெள்ளையடித்தது.

நாணயச் சுழற்சி: நியூசிலாந்து

அவுஸ்திரேலியா: 267/5 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஸ்டீவ் ஸ்மித் 105 (131), மர்னுஸ் லபுஷைன் 52 (78), அலெக்ஸ் காரி ஆ.இ 42 (43), கமரொன் கிறீன் ஆ.இ 25 (12) ஓட்டங்கள். பந்துவீச்சு: ட்றெண்ட் போல்ட் 2/25 [10], மிற்செல் சான்ட்னெர் 1/52 [10], லொக்கி பெர்கியூசன் 1/56 [10], டிம் செளதி 1/57 [10])

நியூசிலாந்து: 242/10 (49.5 ஓவ. ) (துடுப்பாட்டம்: கிளென் 47 (53), ஜேம்ஸ் நீஷம் 36 (34), பின் அலென் 35 (38), மிற்செல் 30 (33) ஓட்டங்கள். பந்துவீச்சு: மிற்செல் ஸ்டார்க் 3/60 [9.5], ஷோன் அபொட் 2/31 [10], கமரொன் கிறீன் 2/25 [6], ஜொஷ் ஹேசில்வூட் 1/51 [10], அடம் ஸாம்பா 1/53 [10])

போட்டி, தொடரின் நாயகன்: ஸ்டீவ் ஸ்மித்



தென்னாபிரிக்காவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்டில்

## 158 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த இங்கிலாந்து

தென்னாபிரிக்காவுக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், ஓவலில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமான மூன்றாவது டெஸ்டின் நேற்றைய நான்காம் நாளில் தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 158 ஓட்டங்களை இங்கிலாந்து பெற்றுள்ளது.

துடுப்பாட்டத்தில், ஒலி போப் 67 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில், மார்கோ ஜன்சன் 5, ககிஸோ றபாடா 4, அன்றிச் நொர்ட்ஜே ஒரு விக்கெட்டைக் கைப்பற்றியிருந்தனர்.

முன்னதாக, முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்டிருந்த தென்னாபிரிக்கா, சகல விக்கெட்டுகளையும் இழந்து 118 ஓட்டங்களையே பெற்றிருந்தது. ஜன்சன் 30 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். பந்துவீச்சில், ஒலி றொபின்ஸன் 5, ஸ்டூவர்ட் ப்ரோட் 4, ஜேம்ஸ் அன்டர்சன் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றியிருந்தனர்.

பளுதூக்கும் போட்டியில்

## வவுனியா நெளுக்குளம் கலைமகள் சாதனை

க. அகரன்

யாழ்ப்பாணம் கந்தர்மடம் சைவபிரகாச பாடசாலையில் அண்மையில் இடம்பெற்ற பாடசாலைகளுக்கிடையிலான மாகாணமட்ட பளு தூக்கும் போட்டியில் வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலய மாணவர்கள் பதக்கங்களை தமதாக்கிக் கொண்டுள்ளனர்.

வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலய பயிற்றுவிப்பாளர் ச. ஜெனோஜனின் பயிற்றுவிப்பில், 17 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான 49 கிலோ கிராம் பிரிவில் நா. நகிந்தன், 82 கிலோ கிராமைத் தூக்கி தங்கமும், ஜொ. ஐதுர்சன் 55 கிலோ கிராம் பிரிவில் 97 கிலோ கிராம் தூக்கி வெள்ளிப் பதக்கமும், கி. சுபிஸ்கரன் 59 கிலோ கிராம் பிரிவில் 100 கிலோ கிராம் தூக்கி வெள்ளிப் பதக்கமும், 20 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் அ. கோகுலன் 65 கிலோ கிராம் பிரிவில் 125 கிலோ கிராம் தூக்கி தங்கப் பதக்கம் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

பிரித்தானியா

மகாராணியின் மறைவுக்கு

# நேபாளத்தில் 2 நாள் துக்கம்



பிரித்தானியாவின் மகாராணி இரண்டாம் எலிசபெத் உடல் நலக் குறைவு காரணமாக கடந்த 8 ஆம் திகதி காலமானார்.

தனது 25 வயதில் ராணியாகப் பதவியேற்ற எலிசபெத் ராணி சுமார் 70 ஆண்டுகாலம் ராணியாக பதவி வகித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் நேபாள அரசானது கடந்த 10 ஆம் திகதி முதல் 12-ஆம் திகதி வரை துக்கம் அனுசரிக்க முடிவு செய்துள்ளது.

மேலும் வெளிநாடுகளில் உள்ள அரசு அலுவலகங்கள் மற்றும் நேபாள தூதரகங்கள் மற்றும் தூதரகங்களில் தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரேசில்



நடுக்கடலில் கோர விபத்து

## 14 பேர் உயிரிழப்பு

நடுக்கடலில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 14 பேர் உயிரிழந்த சம்பவம் பிரேஸிலில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

பிரேசிலில் பாராவில் இருந்து பிலிம் நகரம் நோக்கி, கடந்த 8 ஆம் திகதி சுமார் 40 பேருடன் பயணித்த படகே இவ்வாறு கொடிஜுபா தீவுப் பகுதியில் வைத்து கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்நிலையில் இவ் விபத்தில் 14 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், ஏனையவர்களை மீட்கும் பணியில் மீட்புப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணையின் போது குறித்த படகில் பயணிகளை ஏற்றிச் செல்ல அனுமதி வழங்கப்படவில்லை எனத் தெரிய வந்துள்ளது இந்நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மெக்சிகோ

பஸ்– கனரக வாகனம் மோதி விபத்து

## 18 பேர் உயிரிழப்பு



மெக்சிகோவில் கடந்த 10 ஆம் திகதி, பஸ் மீது எரிபொருளை ஏற்றிச் சென்ற கனரக வாகனமொன்று மோதி விபத்துக்குள்ளானதில் 18 பேர் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மெக்சிகோவின் ஹிடால்கோ நகரில் இருந்து மான்டேரியை நோக்கிப் பயணித்த பஸ்மீதே எரிபொருளை ஏற்றிச் சென்ற கனரக வாகனமொன்று நேருக் நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர் எனவும், உயிரிழப்புக்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பப்புவா நியூ கினியா



## நிலநடுக்கத்தால் மக்கள் அச்சம்

பசிபிக் பெருங்கடல் தீவு நாடான பப்புவா நியூ கினியா நாட்டில் மிகப்பெரிய சக்திவாய்ந்த நிலநடுக்கமொன்று நேற்றைய தினம் (10) ஏற்பட்டுள்ளது.

லே நகரில் இருந்து 65 கிமீ தொலைவில் நேற்றுக் காலை ஏற்பட்ட இந்த நிலநடுக்கமானது ரிச்டர் அளவுகோலில் 7.7ஆக பதிவாகியுள்ளது.

இதனால், வீடு, அலுவலகங்கள், முக்கிய கட்டடங்கள் இடிந்து விழுந்துள்ளன எனவும், பாதிப்பு மற்றும் உயிரிழப்பு பெரிய அளவில் இருக்கும் என அஞ்சப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அப்பகுதியில் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா


## 11 முறை திருமணம், 28 முறை நிச்சயதார்த்தம்

அமெரிக்காவின் Utah பகுதியை சேர்ந்த மொனெட் டயஸ்(Monette Dias) என்ற 53 வயதான பெண், இதுவரை 11 முறை திருமணமும், 28 முறை திருமண நிச்சயதார்த்தமும் செய்துள்ளமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

தனது 15 ஆவது வயதில் தந்தையை இழந்த அவர் தனக்கு உறவு என்று யாரும் இல்லை என ஏங்கியதாகவும், இதனால் கணவர் என்ற பந்தத்தை ஏற்படுத்தி கொள்ள முடிவெடுத்துள்ளார் எனவும் இதனையடுத்து அவருக்கு முதல் திருமணம் இடம்பெற்றுள்ளது.



பாகிஸ்தான்



## ஆபத்து நிறைந்தவனாக மாறுவேன்

### இம்ரான் கான் எச்சரிக்கை

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமரான இம்ரான் கான், தீவிரவாத வழக்கில் என்னை சிறையில் அடைத்தால் ஆபத்தாக மாறிவிடுவேன் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் கடந்த மாதம் 20ஆம் திகதி அன்று நடந்த போராட்டத்தில் பெண் நீதிபதியை மிரட்டும் வகையில் பேசியதாக கூறப்பட்டது.

இதனையடுத்து அவர் மீது தீவிரவாத வழக்கு பதிவு செய்யப்பட்டதோடு, அவர் மீது தொடரப்பட்ட வழக்கை விசாரிக்க நீதிமன்றத்தில் அவரை ஆஜராகுமாறு இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் உயர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட அவர் என்னை எதிர்த்து தீவிரவாத வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. நீதிமன்றத்தில் அந்த வழக்கு விசாரணையின் படி என்னை சிறையில் அடைத்தால், மேலும் ஆபத்துக்குரியவனாக மாறிவிடுவேன் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 12 செப்டெம்பர் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.